
E Paper
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
மின்னிதழ்
2023 ஜனவரி 14 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
1932 - 2022
வரு. 91 இல. 12 | Saturday 14, January, 2023 | 13 பக்கங்கள்

சாரதி அனுமதிப்பத்திர புகைப்படம்

## Online இல் சேவை வழங்க ஸ்டூடியோக்களுக்கு அனுமதி



தேசிய அடையாள அட்டைகள் மற்றும் கடவுச்சீட்டுகளுக்கான புகைப்படங்கள் நாடு முழுவதுமுள்ள ஸ்டூடியோக்கள் மூலம் Aikavo தொழில்நுட்பத்தினூடாக ஒன்லைனில் வெற்றிகரமாக வழங்கப்படுகின்றன. 06

செலவினங்களை குறைப்பதற்காக

## திங்கள் முதல் 30 குறுந்தூர ரயில் சேவைகள் நிறுத்தம்

அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



செலவினங்களை குறைக்கும் வகையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் குறுந்தூர முப்பது ரயில் சேவைகளை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க பிரதான ரயில் பாதைகளில் 18 ரயில் சேவைகளும் களனி வெளி பாதையில் 02 ரயில் சேவைகளும் கரையோர ரயில் பாதையில் 08 ரயில் சேவைகளும் மற்றும் புத்தளம் ரயில் பாதையில் 02 ரயில் சேவைகளும் இடைநிறுத்தப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.


இதன்படி 30 ரயில் சேவைகளை இடைநிறுத்த திணைக்களம் திர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

## உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்த அனைத்து நடவடிக்கைகளும் தயார்

தேர்தல் ஆணைக்குழு நீதிமன்றுக்கு அறிவிப்பு

கேர்ணல் விஜேசுந்தரவின் மனு மீதான விசாரணை 18 ஆம் திகதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உள்ளூராட்சித் தேர்தலை தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்துக்கமைவாக நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் சார்பில் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் இதனை நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ கேர்ணல் விஜேசுந்தர ரிட் மனுவொன்றை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு தொடர்பான விசாரணை நேற்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அதன்போதே தேர்தல் ஆணைக்குழுவின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் இதனை 06

## இலங்கை மதுபான வகைகள் 35 நாடுகளுக்கு ஏற்றுமதி

கடந்தாண்டு 21 மில்.டொலர் வருமானம்

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மதுபான வகைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததன் மூலம் கடந்த வருடத்தில் நாட்டிற்கு 21 மில்லியன் டொலர் வருமானமாக கிடைத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

எமது நாட்டு உற்பத்தியான மதுபானம் உலகின் 35 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள அவர், அதன் மூலம் அரசாங்கத்திற்கு வருடாந்தம் பெரும் வருமானம் கிடைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க கடந்த 2021 ஆம் ஆண்டு மதுபான ஏற்றுமதி மூலம் 20 மில்லியன் டொலர்களையும் கடந்த வருடத்தில் 21 மில்லியன் டொலர்களையும் நாடு வருமானமாக பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து மேற்படி நாடுகளுக்கு சாராயம், தென்னஞ்சாராயம், பனங்கள்ளு போன்ற 06

41 இலட்சம் மாணவர்களுக்கான சீன நன்கொடை

# பாடசாலை சீருடை துணிகள் 70 வீதம் நாட்டை வந்தடைவு

மார்ச் 20 ஆம் திகதிக்கு முன் பாடசாலைகளுக்கு விநியோகம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சீன பதில் தூதுவரினால் கல்வி அமைச்சரிடம் கொழும்பு துறைமுகத்தில் நேற்று கையளிப்பு


பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் தேவையில் 70 வீதத்தை நிவர்த்தி செய்யும் வகையில் சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள பாடசாலை சீருடைத்துணிகள் நேற்று நாட்டுக்கு கிடைத்துள்ளன. சீன பதில்த் தூதுவர் ஹு வெய் (Hu Wei) கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் நேற்று உத்தியோகபூர்வமாக அதனை கையளித்தார்.

மாணவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான 70 வீத சீருடைத் துணியாக 88,62,990 மீற்றர் சீருடைத் துணி கிடைத்துள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். 06

## பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் செயலாளர் நாயகம் ஜனாதிபதியுடன் சந்திப்பு



உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் செயலாளர் நாயகம் (CPA) ஸ்டீபன் டுவிக் (StephenTwigg) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார். இச் சந்திப்பு நேற்று (13) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவும் கலந்துகொண்டார்.



## எல்லை நிர்ணய அறிக்கையை அரசிடம் வழங்க தாமதமாகும்

மஹிந்த தேசப்பிரிய 03

## ஐந்து தமிழ் கட்சிகள் இணைந்து புதிய கூட்டணி நேற்று அறிவிப்பு

இன்று காலை ஒப்பந்தம் கைச்சாத்து

சின்னம் தொடர்பில் இழுபறி விக்கி, மணிவண்ணன் வெளியேற்றம்

**பருத்தித்துறை விசேட, யாழ். விசேட நிருபர்கள்**



ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் தேசிய கட்சி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியன இணைந்து புதிய கூட்டணியை அறிவித்தன.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் நேற்று வெள்ளிக்கிழமை(13) நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே கட்சிகளின் தலைவர்களால் புதிய கூட்டணி அறிவிக்கப்பட்டது 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் உயர் நீதிமன்ற தீர்ப்பு

## நீதி, நியாயத்தை வரவேற்போருக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தரப்பினருக்கு உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு நாட்டில் நீதியையும் நியாயத்தையும் பாராட்டும் அனைவருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பென பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாகவோ அல்லது எத்தகைய உயர்ந்த பதவியை வகித்தாலும் குற்றம் செய்தால் சட்டத்திலிருந்து தப்பிக்க முடியாதென்ற செய்தி இந்த தீர்ப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்றும் பேராயர் 06

வடக்கின் முன்னாள் ஆளுநர்

## ரெஜினோல்ட் குரே நேற்று காலமானார்



வடமாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே நேற்று ஜனவரி 13 ஆம் திகதி தனது 75ஆவது வயதில் காலமானார்.

ஆசிரியராக தனது வாழ்க்கையை ஆரம்பித்த ரெஜினோல்ட் குரே, பாராளுமன்ற உறுப்பினர், 06

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி

## மட்டக்களப்பு, அம்பாறைக்கு கட்டுப்பணத்தை செலுத்தியது

இன்று திருகோணமலைக்கும் செலுத்த ஏற்பாடு



மட்டு. அம்பாறை மாவட்டங்களில் போட்டியிடும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி, நேற்று கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதுடன் இன்று திருகோணமலையில் கட்டுப்பணத்தை செலுத்துமென கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவருமான சி.சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கான உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான 06

## மட்டு-கொழும்பு பஸ் ஊறணியில் பனைமரத்துடன் மோதி விபத்து

03 பயணிகள் படுகாயம்

**கல்லடி குறூப் நிருபர்**



மட்டக்களப்பு, கொழும்பு பிரதான வீதி ஊறணி பிரதேசத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் 03 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி 06

கொரோனா திரிபு பரவுவதையடுத்து

## கோவோவேக்ஸ் தடுப்பூசி விற்பனைக்கு அனுமதி

இந்திய நிபுணர் குழு பரிந்துரை



சீரம் நிறுவனம் தயாரித்த கோவோவேக்ஸ் தடுப்பூசி விற்பனைக்கு இந்திய நிபுணர் குழு பரிந்துரை செய்துள்ளது. கோவேக்சின் அல்லது கோவிஷீல்டு தடுப்பூசியின் 02 டோஸ் போட்டுக்கொண்ட 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஒரு பூஸ்டர் டோசாக இதை பயன்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கொரோனாவுக்கு எதிராக மற்றொரு தடுப்பூசியாக இந்தியாவின் சீரம் நிறுவனம் கோவோவேக்ஸை தயாரித்துள்ளது. இந்த தடுப்பூசியை அவசர கால பயன்பாட்டுக்கு 06

20 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றதாக

## மாவனல்லை பிரதேச சபை தலைவர் நேற்று கைது



மாவனல்லை பிரதேச சபை தலைவர் 20 இலட்சம் ரூபா இலஞ்சமாக பெற்ற போது கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹோட்டலொன்றில் வைத்து தொழிலதிபர் ஒருவரிடம் இலஞ்சம் வாங்கும் போது அவர் கைது செய்யப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மாவனல்லை நகரில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்ட கட்டடமொன்றுக்கான 06

## மின்கட்டண அதிகரிப்பு ஜனவரி 15 முதல் அமுல்

இலங்கை மின்சார சபை தெரிவிப்பு



அமைச்சரவையின் அனுமதியின் பிரகாரம் ஜனவரி 15 ஆம் திகதி முதல் மின் கட்டணத்தை அதிகரிக்கவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதிகரிக்கப்பட்டுள்ள மின் கட்டணம் தொடர்பிலான தரவுகளை ஒரு மாதத்திற்குள் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர், பொறியியலாளர் ரோஹான் செனவிரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை வழங்கிய அனுமதியின் பிரகாரம், ஜனவரி 15 ஆம் திகதி முதல் வீட்டுப் பாவனை மின்சார 06

பொலிஸ் தடுப்புக் காவலிலுள்ள மாமாவுக்கு

## முட்டை பாணுக்குள் ஹெரோயின் கொண்டுவந்த மருமகன் கைது



பொரளை வனாத்தமுல்ல பிரதேசத்தில் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது மாமாவுக்கு நேற்று(13) காலை உணவு கொண்டுவந்த போது மருமகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலை உணவுக்காக கொண்டுவந்த முட்டைப் பாணுக்குள் ஹெரோயின் போதைப் பொருளை மறைத்து கொண்டு வந்த குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். 06



ஹபரணை காட்டுப்பகுதியில்

## கடுகதி ரயில் மோதி 03 யானைகள் பலி

மட்டு – கொழும்பு ரயில் சேவை நேற்று பாதிப்பு

ஹபரணையில் ரயிலில் மோதி மூன்று காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு – திருகோணமலை – கொழும்பு ரயில் பாதையில் ஹபரணை மற்றும் கல் ஓயா நிலையங்களுக்கு இடையில் ஹடரெஸ் கொடுவ பிரதேசத்திற்கு அருகில் நேற்று அதிகாலை வேளை அதிவேகமாக பயணித்த ரயிலில் மோதுண்டு மூன்று யானைகள் உயிரிழந்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. ரயில் நேற்று அதிகாலை விபத்தின் பின்னர் தடம் புரண்டதாக 06

நாடு திரும்ப எதிர்பார்த்திருந்த

## இலங்கைப் பெண் ஓமானில் மரணம்



ஓமானில் நாடு திரும்புவதற்கு எதிர்பார்த்திருந்த இலங்கை பெண்ணொருவர் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர் மஹவ தலதாகம பகுதியைச் சேர்ந்த 67 வயதுடையவரென தெரிவிக்கப்பட்டுள்ளது. 06

# சர்வதேச செய்திகள்

## அமெரிக்காவில் கோயல் உரை



அமெரிக்கா விஜயம் மேற்கொண்டிருக்கும் இந்தியா வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், இந்தியாவின் பெரும் பொருளாதார மாற்றம் மற்றும் வல்லமை தொடர்பில் விதந்து பேசியுள்ளார். நியூயோர்க், நஸ்டாக்கில் உள்ள அமெரிக்க–இந்திய வர்த்தக சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட வர்த்தக மாநாட்டில் இது பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார்.

“நியூயோர்க்கில் உள்ள நாஸ்டாக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட வணிக வட்டமேசை கூட்டத்தில், இந்தியாவின் பெரும் பொருளாதார மாற்றம் மற்றும் வல்லமை பற்றி பேசினேன். வலுவான இந்திய–அமெரிக்க வர்த்தகம் மற்றும் அதிகரித்து வரும் முதலீடுகள் நமது இருதரப்பு கூட்டாண்மைக்கு புதிய மதிப்பு மற்றும் ஆற்றல் சேர்க்கின்றன” என்று கோயல் ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

## டிசம்பரில் சீனாவில் பொருளாதார சரிவு



கொவிட்–19 பெருந்தொற்று கடந்த டிசம்பரில் சீனாவில் மீண்டும் தீவிர மடைந்ததன் விளைவாக அந்நாட்டு பொருளாதாரத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதை உத்தியோகபூர்வத் தரவுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கொவிட் கட்டுப்பாடுகளை தளர்த்தியதை தொடர்ந்து நோய் பரவல் தீவிரம் அடைந்துள்ளது. அதன் விளைவாக மக்கள் வீடுகளில் முடங்க வேண்டிய நிலை ஏற்பட்டதோடு வர்த்தக நடவடிக்கைகளிலும் நுகர்வோர் செலவுகளிலும் மாத்திரமல்லாமல் உற்பத்தி துறையிலும் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளதை அத்தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

குறிப்பாக கடந்த நவம்பரில் 49.4 வீதமாகக் காணப்பட்ட ஏற்றுமதி சார் வர்த்தக நடவடிக்கைகள் டிசம்பரில் 49 வீதத்திற்கு வீழ்ச்சி அடைந்துள்ளன. இவ்வாறான சரிவை ஏனைய துறைகளிலும் அவதானிக்க முடிகிறது.

## உலக வெப்பம் எட்டு ஆண்டுகளில் உச்சம்



உலக வரலாற்றில் கடந்த 8 ஆண்டுகளே மிக வெப்பமானவை என்று ஐக்கிய நாடுகள் சபையின் உலக வானிலை ஆய்வு அமைப்பு கூறியுள்ளது.

கடந்த ஆண்டு 5ஆவது அல்லது 6ஆவது மிக வெப்பமான ஆண்டு என அது சொல்லிற்று. வருடாந்திரச் சராசரி வெப்பநிலை, தொழில் புரட்சிக்கு முன் பதிவான வெப்பநிலையை விட 1.15 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருந்ததாகக் கூறப்பட்டது. கடந்த 8 ஆண்டுகளிலும் அதே போக்கைக் காணமுடிந்தது. தொடர்ந்து அதிகரிக்கும் வெப்ப வாயுக்களின் வெளியேற்றம் இதற்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.

2020ஆம் ஆண்டில் ஆரம்பித்த லா நினா பருவ நிலை நிகழ்வு தட்பவெப்பநிலையைக் குறைக்கும் ஆற்றலைக் கொண்டது. எனினும் அது அவ்வளவாக உதவவில்லை என்று வானிலை ஆய்வக அமைப்பு குறிப்பிட்டது.

இதுவரை பதிவான மிக வெப்பமான ஆண்டு 2016 ஆகும்.

அடுத்தபடியாக 2019, 2020 ஆகிய ஆண்டுகள் வெப்பம் மிகுந்தவையாகப் பதிவாகியுள்ளன.

## ரொக் அன்ட் ரோல் பாடகரான எல்விஸின் ஒரே மகள் மரணம்

ரொக் அன்ட் ரோல் பாடகர் எல்விஸ் பிரெஸ்லியின் ஒரே மகளான லிசா மேரி தனது 54 ஆவது வயதில் காலமானார்.

“எனது அழகான மகள் லீசா மேரி எம்மை விட்டு விடைபெற்றுச் சென்றார் என்ற பெரும் கவலைக்குரிய செய்தியை கடுமையான மனதுடன் கூறிகொள்றேன்” என்று அவரது தாயாரான பிரிசிலா பிரெஸ்லி குறிப்பிட்டுள்ளார்.

தனது தந்தை போல் பாடகியான லீசா மேரி, கடந்த வியாழக்கிழமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே மரணம் அடைந்துள்ளார். அவர் மாரடைப்பால் பாதிக்கப்பட்டதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கலிபோர்னியாவின் கலபாசசில் இருக்கும் தனது வீட்டில் அவர் நினைவற்ற நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக அது தொடர்பில் தெரிந்த தரப்புகளை மேற்கோள் காட்டி டீ.எம்.சீ சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

இவ்வார ஆரம்பத்தில் பெவர்லி ஹில்ஸில் நடைபெற்ற கோல்டன் கிளோப் விருது விழாவில் லிசா கலந்துகொண்டார். விழாவில் எல்விஸை மையமாகக் கொண்ட திரைப்படத்தில் நடித்த நடிகர் ஆஸ்ட்டின் பட்லர் சிறந்த நடிகருக்கான விருதை வென்றார்.

1977ஆம் ஆண்டு எல்விஸ் பிரெஸ்லி திடீர் நெஞ்சுவலியால் தனது 42ஆவது வயதில் காலமானார்.





1968 ஆம் ஆண்டு பிறந்த லிசா மேரி தனது தந்தை போன்று இசைத் துறையில் பிரவேசித்து 2003 ஆம் ஆண்டு இசைத் தட்டு ஒன்றை வெளியிட்டு பெரும் வரவேற்பைப் பெற்றார்.

அவர் புகழ்பெற்ற நட்சத்திரங்களான பொப் ஜாம்பவான் மைக்கல் ஜாக்சன், நடிகர் நிகலஸ் கேஜ் மற்றும் இசைக் கலைஞர்களான டானி கியோப் மற்றும் மைக்கல் லொக்வுட் ஆகியோரை திருமணம் செய்ததிலும் பெரிதும் பிரபலமடைந்தவராவார்.

அவர் நடிகை ரிலி கியோப் உட்பட நான்கு பிள்ளைகளின் தயாவார். அவரது ஒரே மகன் 2020 ஆம் ஆண்டு தற்கொலை செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தம்பதியை கொன்றவருக்கு விச ஊசியால் தண்டனை



சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் வயதான தம்பதியை கொன்ற ஒருவருக்கு அமெரிக்காவின் ஒக்லோஹாமா சிறையில் கடந்த வியாழனன்று (12) மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

மத்திய அமெரிக்க மாநிலமான ஒக்லோஹாமாவில் உள்ள மக்லஸ்டர் சிறையில் 62 வயது ஸ்கொட் எயிசம்பருக்கு விச ஊசி செலுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. “நீதி நிலைநாட்டப்பட்டது” என்று இந்த மரண தண்டனையை பார்த்த ஒக்லோஹாமாசட்டமாஅதிபர்கெட்னர் ட்ரம்மன்ட் தெரிவித்தார்.

2003 ஒக்டோபர் 18 ஆம் திகதி 70 வயதுகளில் இருக்கும் தம்பதியை கொன்றதாக எயிசம்பர் குற்றங்காணப்பட்டார். இந்த தம்பதியை மணிக் கணக்கில் சிறைப்பிடித்திருந்த எயிசம்பர் பின்னர் இருவரையும் தலையில் சுட்டுக் கொன்றார். குற்றம் நிரூபிக்கப்பட்ட அவருக்கு 2005ஆம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் எலிசம்பருக்கு கருணை அளிப்பதற்கு எதிராக கடந்த டிசம்பரில் ஒக்லோஹாமா மன்னிப்பு மற்றும் நன்னடத்தை பிணை சபை வாக்களித்தது.

ஒக்லோஹாமாவில் இந்த ஆண்டு மரண தண்டனை நிறைவேற்ற எதிர்பார்த்திருக்கும் 10 கைதிகளில் முதலாமவராக எலிசம்பர் உள்ளார். அங்கு 2023இல் ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட ஒரு மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி வரும் பெப்ரவரி 16 ஆம் திகதி கொலை குற்றவாளியான ரிச்சர் கொபில் என்ற கைதிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது.

## இஸ்ரேலிய இராணுவத்தால் 3 பலஸ்தீனர் சுட்டுக்கொலை



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இரு வெவ்வேறு சம்பவங்களில் இஸ்ரேலிய படையினரால் மூன்று பலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எனினும் தப்பிச் சென்ற சந்தேக நபர்கள் மீது சூடு நடத்தியதாகவும் சுற்றிவளைப்பின்போதும் படையினர் மீது கல்வீச்சு நடத்தியதாகவும் இந்த சம்பவங்கள் பற்றி இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

மேற்குக் கரையில் 2022 இல் நீடித்த வன்முறை தொடர்ந்து இடம்பெற்று வருவதோடு இது 2005இல் ஐ.நாவின் தரவுகள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து அதிக உயிரிழப்புக் கொண்டதாக உள்ளது.

இஸ்ரேலிய வரலாற்றில் தோன்றிய மிகத் தீவிர வலதுசாரி அரசு ஒன்று கடந்த டிசம்பரில் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு தலைமையில் பதவி ஏற்றிருக்கும் நிலையில் இந்த வன்முறைகள் தீவிரம் அடையும் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது.

ஜெனின் நகருக்கு அருகில் உள்ள கபாத்தியா சிறு நகரில் இஸ்ரேலிய துப்பாக்கிச் சூட்டில் 18 வயது அப்துலாதி நசால் மற்றும் 25 வயது ஹபிப் காமில் என்ற இரு இளைஞர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னதாக ரமல்லாவுக்கு அருகில் இருக்கும் கலந்தியா அகதி முகாமில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படையின் துப்பாக்கிச் சூட்டில் 41 வயது சமீர் அவுனி ஹார்பி கொல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## பிலிப்பைன்ஸில் பயங்கர வெள்ளத்தில் 9 பேர் பலி

பிலிப்பைன்ஸில் ஏற்பட்டுள்ள கடுமையான வெள்ளத்தால், குறைந்தது 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இடைவிடாமல் மழை பெய்ததால், பல மாநிலங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. தலைநகர் மணிலாவுக்குத் தெற்கே உள்ள ஸம்பவோங்கா பகுதியில் சிலர் வெள்ள நீரில் மூழ்கி உயிரிழந்ததாக உள்ளூர்ப் பேரிடர் நிர்வாகக் குழு தெரிவித்தது. அந்தப் பகுதியிலிருந்து 5,000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன.

பிலிப்பைன்ஸின் கிழக்கில் உள்ள சமர் வட்டாரத்தில் குறைந்தது



நால்வர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. அங்கு கடந்த ஒரு வாரமாக கனத்த மழை பெய்துவருகிறது.

23 நகரங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

## சுவீடனில் மிக அரிய கனிமம் கண்டுபிடிப்பு

சுவீடனைச் சேர்ந்த சுரங்க நிறுவனம் மிகவும் அரிதான கனிமம் ஒன்றை கண்டுபிடித்து இருப்பதாக அறிவித்துள்ளது.

இந்த கண்டுபிடிப்பு மிகப்பெரிய ஊக்கமாக கருதப்படுவதுடன், சீனாவை சார்ந்து இருப்பதை குறைக்க உதவும் என்றும் சுவீடனின் சுரங்க நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

மின் வாகன உற்பத்திக்குப் பயன்படும் உலகின் அரிய தாதுவாக கருதப்படும் இந்த புவி கனிமம் சுவீடனில் பசுமை மாற்றத்தை செயல்படுத்த, முக்கியமான மூலப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கான, கட்டுமான



தொகுதியாக மாறக்கூடும் என சுரங்க நிறுவன அதிகாரி மோஸ்ட்ரோம் கூறியுள்ளார்.


இந்த புதிய கனிமம் ஸ்காண்டியம், யட்ரியம் மற்றும் 15 லாந்தனைடுகள் உள்ளிட்ட 17 உலோகங்களை உள்ளடக்கியதாகும்.

## அமெரிக்காவில் சூறாவளி தாக்கி அறுவர் உயிரிழப்பு

அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தில் ஏற்பட்ட சூறாவளியில் குறைந்தது ஆறு பேர் கொல்லப்பட்டிருப்பதோடு தொடர்ந்து சடலங்களை தேடி வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் தென் பகுதியில் கடந்த வியாழனன்று (12) 35க்கும் அதிகமான சூறாவளிகள் பதிவானதாக தேசிய காலநிலை அவதானிப்பு நிலையம் குறிப்பிட்டுள்ளது. இதன்மூலம் 30 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

இதில் மிகப் பெரியதும் தீவிரமானதுமான சூறாவளி ஒன்று அலபாமாவின்



செல்மாவில் பெருமாளவு சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சூறாவளிகளால் நான்கு மாநிலங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் மின்சாரம் இன்றி இருளில் மூழ்கியுள்ளனர். இதில் அலபாமாவின் அவுடோகா கௌண்டி பகுதியிலேயே அனைத்து உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன.

## உக்ரைனியப் போருக்கு புதிய தளபதியை நியமித்தது ரஷ்யா

ரஷ்யா அதன் இராணுவத் தலைமைத் தளபதியை உக்ரைன் போருக்குப் பொறுப்பேற்கும்படி உத்தரவிட்டுள்ளது. உக்ரைனில் பின்னடைவை எதிர்நோக்கும் வேளையில் ரஷ்யா இந்தப் புதிய உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஜெனரல் வெலரி கரசிமோவ் உக்ரைன் படையெடுப்பை இனி வழிநடத்தவுள்ளார்.

தற்போதைய தளபதி ஜெனரல் செர்கே சுரோவிக்கின் அவருக்குத் துணையாகச் செயல்படுவார்.

இராணுவப் பணிகள் விரிவடைந்துள்ளதாலும் துருப்புகளுக்கிடையே கூடுதல் தொடர்பு தேவைப்படுவதாலும் தலைமைத்துவ மாற்றம் செய்யப்படுவதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு கூறியது.

ரஷ்ய தனியார் இராணுவக் குழுவான வெக்னர் கிழக்கு சோல்டார் நகரை முழுமையாகக் கைப்பற்றிவிட்டதாகக் கூறிய வேளையில் புதிய அறிவிப்பு வந்துள்ளது. ரஷ்யப் படையினர் டோன்பாஸ் வட்டாரத்திற்குள் நுழைவதற்கு சோல்டார் நகரம் பயன்படக்கூடும்.

வெக்னர் குழு கடுஞ் சண்டைக்குப் பின் சுமார் 500 உக்ரைனிய இராணுவ வீரர்களைக் கொன்றதாகக் கூறியது.

அதை நிராகரித்த உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி அங்கு இன்னும் சண்டை தொடர்கிறது என்றார்.

சோல்டார் நகரைக் கைப்பற்றும் முயற்சியில் ரஷ்யப் படையினருக்குப் பேரிழப்பு ஏற்பட்டது என்று உக்ரைனிய இராணுவம் கூறுகிறது.



தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஜனவரி 14 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN




ஜனாதிபதி முதல், அதிகாரிகள் உட்பட அனைவரதும்

# Tax on non-cash benefits வரியை சரியாக அறவிட முறைமை உருவாக்க வேண்டும்

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் வலியுறுத்து

நாட்டின் ஜனாதிபதி முதல் அனைத்து அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளின் நிதி சாரா அனுகூலங்கள் தொடர்பில் அறவிடப்பட வேண்டிய வரியை (Tax on noncash benefits) சரியாக அறவிடுவதற்கான முறைமையொன்று செயற்படுத்தப்பட வேண்டுமென அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி. சில்வா வலியுறுத்தியுள்ளார்.

ஏதாவதொரு பதவி வகிக்கும் நபருக்கு நிதி சாரா அனுகூலங்களாக வாகனம், வீடு, பணியாளர்கள் போன்ற அனுகூலங்கள் கிடைப்பெறுவதால், அவை அனைத்தையும் கருத்திற் கொண்டு சரியாக இந்த வரி அறவீடு இடம்பெற வேண்டுமென அவர் சுட்டிக்காட்டினார்.



2023 ஆம் ஆண்டுக்கான வரி அறிவிடுவது பற்றிய வேலைத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அண்மையில் (10) அரசாங்க நிதி பற்றிய குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

2022 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட வரி சுமார் 860 பில்லியன் ரூபாய் எனவும் 2023 ஆம் ஆண்டில் சுமார் 1,667 பில்லியன் ரூபாய் அறவிடுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் உளநாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் இதன்போது சுட்டிக்காட்டினார். அதற்கமைய, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுமார் 922 பில்லியன் ரூபாய் வரி இவ்வாண்டு பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

2023 ஆம் ஆண்டின் எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தில் கூட்டிணைந்த வருமான வரி மூலமே அதிக நிதி கிடைக்கப்பெறவுள்ளது. அது 603 பில்லியன் ரூபாவாகும். அதேபோன்று, பெறுமதி சேர் வரி (VAT) மூலம் 553 பில்லியன் ரூபாய் வருமானம் பெற எதிர்பார்ப்பதாக உள்நாட்டு இறைவரித்திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்த நிதி அறவிடும் வேலைத் திட்டத்தை வலுப்படுத்துவது தொடர்பில் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. வரி செலுத்தாமை தொடர்பில் நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் உள்ளிட்ட சிக்கல்கள் தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெளிவுபடுத்தியது. இந்த சிக்கல்களை மதிப்பீடு செய்து தீர்வுகளை பெற்றுக் கொள்ள அரசாங்க நிதி பற்றிய குழு எதிர்காலத்தில் தலையிடுவதாக குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, இந்த வரி அறிவிடுவது தொடர்பான முன்னேற்றம் பற்றி பெப்ரவரி மாதத்தில் குழுவுக்கு அறிக்கையிடுமாறும் குழுவின் தலைவர் உளநாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு அறிவுறுத்தினார்.

அங்கவீன இராணுவ வீரர்களின் ஓய்வூதியத்துக்கும் வரி அறிவிடுவதாக வெளியான ஒருசில ஊடக அறிக்கைகள் தொடர்பிலும் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. எந்தவகையிலும் ஓய்வூதியத்துக்கு அவ்வாறான வரி அறவீடு மேற்கொள்ளப்படுவதில்லையென உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் 2307/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை அனுமதிப்பதற்காக குழுவில் சமர்பிக்கப்பட்டிருந்தது. விளையாட்டு உபகரணங்கள், ரயில் உதிரிப்பகங்கள், அலங்காரத் துறைசார்ந்த ஒரு சில பொருட்கள் உள்ளிட்ட பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி கட்டுப்பாட்டை தளர்த்துவதற்காக இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

06

## நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்‌ஷ இந்தோனேசிய தூதுவருடன் சந்திப்பு



நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி, கலாநிதி விஜயதாச ராஜபக்‌ஷ மற்றும் இலங்கையிலுள்ள இந்தோனேசிய தூதுவர் Dewi Gustina Tobing க்குமிடையிலான சந்திப்பு நீதி அமைச்சில் நேற்று (13) நடைபெற்றது.

இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவை மேம்படுத்துவது தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. பொருளாதார அபிவிருத்தி உட்பட அனைத்து நடவடிக்கைகளுக்கும் தேவையான ஆதரவைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்த நிலைமைக்குப் பின்னர் அரசாங்கத்தினால் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை மேம்படுத்துதல், இதற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து நீதி

06

பங்களாதேஷ் வங்கி இலங்கைக்கு

## கடனை திருப்பிச் செலுத்த ஆறு மாத கால அவகாசம்

200 மில்லியன் டொலர் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு இலங்கைக்கு மேலும் ஆறு மாத கால அவகாசத்தை பங்களாதேஷ் வங்கி வழங்கியுள்ளது. பங்களாதேஷ் மத்திய வங்கியின் மூத்த அதிகாரி ஒருவர் இதனை தெரிவித்துள்ளார்.

பல மாதங்களாக கடுமையான நிதிப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள இலங்கை, 2021 மே மாதத்தில் பங்களாதேஷிடமிருந்து 200 மில்லியன் டொலர் கடனை பெற்றுக்கொண்டது.

கடந்த ஆண்டு ஏப்ரல்

06

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்

# தடுக்க தவறியோர் மீது வழக்கு தொடர வேண்டும்

சட்ட மாஅதிபரை கோருகிறார் அனுரகுமார எம்பி



ஈஸ்டர் தாக்குதலைத் தடுக்கத் தவறிய தரப்பினருக்கு எதிராக சட்டமா அதிபர் உடனடியாக புதிய வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த அடிப்படை உரிமை மனுவில் தாக்குதல் தொடர்பான நட்டஈடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மற்றும் ஏனைய பங்குதாரர்களுக்கு உத்தரவிட்டப்பட்டுள்ள போதிலும், தாக்குதலைத் தடுக்கத் தவறியமை தொடர்பில் புதிய வழக்குத் தாக்கல் செய்ய வேண்டியுள்ளது.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவின் பிரகாரம், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் குற்றவாளிகள் என உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த தாக்குதலுக்கு இரண்டு முக்கிய கட்சிகள் பொறுப்பு. ஒன்று இந்தத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய கட்சி, மற்றொரு தரப்பினர் இந்தத் தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவர்கள்.

இந்த அடிப்படை உரிமை மனுவில் கொடுக்கப்பட்டுள்ள தீர்ப்பின்படி, தாக்குதலைத் தடுக்கும் பொறுப்பை உயர் அரசியல் மட்டமும் அதிகாரிகளும் நிறைவேற்றவில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. எனவே, இந்த அடிப்படை உரிமை மனு மூலம், தாக்குதலைத் தடுக்கத் தவறியது குறித்து புதிய வழக்குத் தாக்கல் செய்வதற்குத் தேவையான உண்மைகள் கிடைத்துள்ளன. இந்தத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய மைத்திரி உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக சட்டமா அதிபர் உடனடியாக வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என அனுரகுமார எம்பி கோரிக்கை விடுத்துள்ளார்.




## Regional Sales Executive
(Eastern Province)

The Associated Newspapers of Ceylon Limited (ANCL), widely known as Lake House, is the home and heart of print media in Sri Lanka. The country's pioneer print media institution having a history of over 100 years and 25 years of online publishing, continues to occupy the number one spot in the print media industry.

Lake House is looking for talented and dynamic individuals who possess the following qualifications and requirements to fill the above vacancy in the Sales Department.

Required qualifications & requirements
- A Bachelor's Degree in Management or Commerce from a recognized University or Member of SLIM/CIM or
- Passed GCE (A/L) examination in any stream with at least 4-5 years experience in the field of Marketing or Sales and
- Good communication skills to maintain rapport with our news agents.
- Attribute to sales or marketing will be distinct advantage.
- Should possess a valid driving license at least for light vehicles and vehicle should be registered under the name of the applicant.
- Applicants who reside in the Eastern Province is preferred.

Age : Below 35 years.

**Conditions of Employment:**

The appointment will be on contract basis and based on performance the contract period will be renewed.

Remuneration :

An attractive and negotiable remuneration package commensurate with the qualifications and experience will be offered to the selected candidate.

Applications:

Please send your CV with names and contact details of two non-related referees to the under mentioned address within 7 working days of this advertisement stating the position on the top left hand corner of the envelop or e-mail your CV to the following e-mail address with the position applied for in the subject line.

**Head of Human Capital**
The Associated Newspapers of Ceylon Ltd.
No. 35, D.R. Wijewardene Mawatha, Colombo 10.
hc@lakehouse.lk


## எல்லை நிர்ணய அறிக்கையை அரசிடம் வழங்க தாமதமாகும்

மஹிந்த தேசப்பிரிய



எல்லை நிர்ணய குழுவின் இறுதி அறிக்கையை குறித்த திகதியில் அரசாங்கத்திடம் வழங்குவது சாத்தியமில்லை என குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள 8,911 உள்ளூராட்சி மன்றத் தொகுதிகள் 4,000 உள்ளூராட்சித் தொகுதிகளாகக் குறைக்கப்பட வேண்டும் என்று கொள்கைத் தீர்மானம் எடுத்ததன் பின்னர், மஹிந்த தேசப்பிரிய தலைமையில் எல்லை நிர்ணய குழு நியமிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் பெப்ரவரி 28 ஆம் திகதி எல்லை எல்லை நிர்ணய பணிகளை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நடைமுறைச் சிக்கல்கள் பல காரணமாக அது தாமதமாகும் என குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி

## விரைவில் புதிய கூட்டணி சிவநேசதுரை சந்திரகாந்தன்



கிழக்கு மாகாணத்தை மையப்படுத்திய பலமான கூட்டமைப்பு ஒன்றை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதாக கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிளவும் கிழக்கு சார்ந்த கூட்டமைப்பிற்கான ஒரு அழுத்தத்தை தோற்றுவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனவே, கிழக்கு மாகாணத்தை மையப்படுத்திய அனைவரையும் ஒன்றிணைத்து புதிய கூட்டமைப்பை உருவாக்கவுள்ளதாக சிவநேசதுரை சந்திரகாந்தன் குறிப்பிட்டுள்ளார்.

உதாரணமாக, போராட்ட அமைப்புக்களில் இருந்து வெளியேறியவர்கள் மற்றும் போராட்டங்களின் வலி தெரிந்தவர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சில அமைப்புகள் போலி தேசியவாதிகளை நம்பியே செயற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

## கஞ்சாவுடன் கைதான SSP பணி இடைநீக்கம்; பொலிஸ் OICயும் கைது

மொனராகலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமார ஹேரத் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு அமைய, பொலிஸ் மாஅதிபர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

இதன்படி, மொனராகலை

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 246.96 | 258.26 |
| கனடியன் டொலர் | 266.74 | 278.59 |
| யூரோ | 384.81 | 400.37 |
| ஜப்பான் யென் | 2.7043 | 2.8159 |
| சிங்கப்பூர் டொலர் | 268.94 | 280.31 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 436.25 | 452.93 |
| சுவிஸ் பிராங்க் | 387.32 | 406.01 |
| அமெரிக்க டொலர் | 360.47 | 371.36 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 960.78 | கட்டார் ரியால் | 98.82 |
| குவைத் டினார் | 1,183.98 | சவூதி ரியால் | 96.48 |
| ஓமான் ரியால் | 940.83 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.62 |

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 30ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 20

### குறள் தரும் சிந்தனை



இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்

உற்றாராக இல்லாமல் உற்றார்போல நடிப்பவர்களின் நட்பு, மகளிருக்குரிய நற்பண்பு இல்லாமல் அப்பண்பு உள்ளவர் போல நடிக்கும் விலை மகளிரின் மனம்போல உள்ளொன்றும் புறமொன்றுமாக இருக்கும்.

## மின்சார உற்பத்தியில் எதிர்காலத்தில் மாற்றுவழிகளை நாடுவது அவசியம்!

மின்சாரக் கட்டணங்களை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான தீர்மானங்கள் பற்றிய அறிவித்தல் இதுவரை வெளிவராத போதிலும், அதிகரிப்புக்கான சாத்தியம் உள்ளதாகவே தெரிகின்றது.

இலங்கை மின்சார சபை தொடர்ந்தும் நஷ்டத்திலேயே இயங்கி வருகின்றது. அதிக செலவில் மின்சாரத்தைத் தயாரித்து குறைந்த விலையில் பாவனையாளர்களுக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது. அதன் காரணமாகவே மின்சார சபை நஷ்டத்தில் இயங்குகின்றது.

கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் இதுபற்றி காத்திரமாகச் சிந்தித்துச் செயற்பட்டிருந்தால் மின்சார உற்பத்திக்காக இத்தனை பணத்தைச் செலவிட வேண்டிய அவசியம் இருந்திருக்காது. கடந்த கால உதாசீனங்களின் விளைவே இதுவாகும்.

நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக நாம் எரிபொருளையே நம்பியிருக்கின்றோம். மின்னுற்பத்திக்காக பெருமளவு எரிபொருளை எமது நாடு இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. அதற்கென அதிக பணத்தை செலவிட்டுக் கொண்டேயிருக்கின்றோம். நாட்டின் வருமானத்தின் பெரும் பகுதி எரிபொருள் இறக்குமதிக்கென செலவிடப்படுகின்றது. எமது பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்துகின்ற பிரதான காரணியாக இது உள்ளது.

வாகனங்களுக்காக பெருமளவு எரிபொருள் பயன்படுத்தப்படுகின்றது. பெற்றோல் மற்றும் டீசலுக்குப் பற்றாக்குறை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் முழு நாடுமே முடங்கிப் போகின்றது. அதேசமயம் உலகில் எரிபொருளுக்கான கேள்வி நாள்தோறும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. சர்வதேச சந்தையில் எரிபொருளின் விலையும் தினமும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இந்நிலையில் மின்சார உற்பத்திக்காகவும் திரவ எரிபொருளை எமது நாடு பெருமளவில் பயன்படுத்துகின்றது. அவ்வாறான மின்னுற்பத்திக்குரிய செலவினம் மிகவும் அதிகமாகும். எனவேதான் மின்கட்டணத்தை அவ்வப்போது அதிகரிக்க வேண்டியுள்ளது.

எமது அயல்நாடான இந்தியா எரிபொருள் மற்றும் மின்சாரத்துக்கான மாற்றுவழிகள் குறித்து ஏற்கனவே அதிகம் கவனம் செலுத்தத் தொடங்கி விட்டது. மின்சாரத்தில் இயங்கும் கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை உற்பத்தி செய்வதில் இந்திய நிறுவனங்கள் கவனம் செலுத்துகின்றன. பற்றரியில் இயங்கும் சிறியரக வாகனங்கள் அங்கு அதிகம் புழக்கத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் விலைகளும் குறைவானதாகும்.

பற்றரியில் இயங்கும் வாகனங்களால் எரிபொருள் மீதப்படுத்தப்படுகின்றது. அவ்வாகனங்கள் சூழலுக்கு தீங்கற்றவையாகும். அவ்வாகனங்களைக் கொள்வனவு செய்வதில் மக்கள் அங்கு அதிகம் நாட்டம் காட்டத் தொடங்கியுள்ளனர். ஆகவே பற்றரியில் இயங்கும் கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை மக்கள் மத்தியில் அறிமுகம் செய்வதில் இந்திய நிறுவனங்கள் அதிக கவனம் செலுத்துகின்றன.

எரிபொருள் விடயம் அவ்வாறிருக்கையில், மின்சார உற்பத்தியிலும் இந்தியா மாற்றுவழிகளிலேயே அதிக கவனம் செலுத்துகின்றது. இந்தியாவில் காற்றாலை மின்னுற்பத்தி பரவலாக மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ்நாட்டுக் கிராமங்களில் காற்றாலை மின்சார நிலையங்களை அதிகம் காண முடிகின்றது. அதுதவிர சூரியப்படல் மின்சார உபகரணங்களும் பரவலாகக் காணப்படுகின்றன. இவையெல்லாம் நாட்டின் மொத்த மின்சார உற்பத்தியில் ஓரளவுக்கேனும் பங்களிப்பைச் செலுத்தக் கூடியனவாகும்.

எதிர்காலத்தில் முகம் கொடுக்கப் போகின்ற அதிகரித்த மின்சாரத் தேவையை ஈடு செய்வதாயின் இவ்வாறான மாற்றுவழிகள் குறித்து அதிகம் கவனம் செலுத்த வேண்டியது தவிர்க்க முடியாததாகும். அணுமின்னுற்பத்தி நிலையங்கள் மூலமான மின்னுற்பத்தி குறித்தும் இந்தியா தற்போது கவனம் செலுத்த வேண்டிய நிலைமையில் உள்ளது. கைத்தொழில் பெருக்கமும், மக்கள் குடித்தொகை அதிகரிப்பும் வேகமாகச் சென்று கொண்டிருப்பதால் இவ்வாறான அக்கறை அவசியமாகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை எரிபொருள் மற்றும் மின்சாரத்துக்கான மாற்றுவழிகள் தொடர்பாக கடந்த காலத்தில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. அவ்வாறு கவனம் செலுத்தப்பட்டிருப்பின் எரிபொருள் மற்றும் மின்நெருக்கடி தற்போது எம்மை அதிகம் பாதித்திருக்க மாட்டாது. எனவே எமது நாடு இனிமேலாவது மாற்றுசக்தி வழிகள் குறித்து அதிகம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

சூரியப்படல் மின்னுற்பத்தி குறித்து நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம். ஒவ்வொரு வீடுமே தமக்கான மின்சாரத்தை சுயமாக உற்பத்தி செய்யும் நிலைமை ஏற்படுகின்ற போது நாட்டில் மின்நெருக்கடியை ஓரளவாவது கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும். சூரியப்படல் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான கடனுதவிகள் குறித்து நிதிநிறுவனங்கள் சிந்திப்பதும் அவசியம்.

மின்னுற்பத்திக்கான மாற்றுவழிகளில் நாம் வெற்றி பெற்று விட்டால் எரிபொருளுக்கான தேவையும் பெருமளவில் குறைந்து விடுவதற்கு இடமுண்டு. உலகின் எரிபொருள் நெருக்கடியைப் புரிந்து இலங்கை இனிமேல் மாற்றுவழிகள் குறித்து கவனம் செலுத்துவது தவிர்க்க முடியாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# அகத்திய முனிவர் நீராடிய மகாவலி கங்கையில் ‘சித்தர்கள் குரல்’ அமைப்பினர் அபிஷேகம்

2000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மொழிக்கான ‘அகத்தியம்’ என்ற முதல் இலக்கண நூலை எழுதியவரும், சப்தரிசிகளில் ஒருவருமான அகத்திய முனிவர் இலங்கையில் ஆடிஅமாவாசையில் நீராடியதாக புராண இதிகாசங்களில் குறிப்பிடப்படும் மகாவலி கங்கையில் மரகதலிங்கத்திற்கு அபிஷேகம் இடம்பெற்றது.

அகத்தியர் சஞ்சாரம் செய்ததாக நம்பப்படுகின்ற கங்குவேலி பிரதேசத்திற்கு இலங்கை சித்தர்கள் குரல் அமைப்பினர் அண்மையில் விஜயம் செய்தனர்.

‘சித்தர்கள் குரல்’ அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி ஜி தலைமையிலான குழுவினர் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கூடிய மூதூர் கங்கு வேலி எனும் இடத்திற்கு விஜயம் செய்தனர்.

அதற்கு முன்னதாக அகத்திய ஆலயத்தை தரிசித்த பின்னர் தாபனத்தின் தலைவர் ஓய்வுநிலைஅதிபர் வேலுப்பிள்ளை தவராசா மேற்படி குழுவினரை வரவேற்றார்.

‘சித்தர்கள் குரல்’ அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜியின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை அகத்தியர் பெருமானின் ஆயிலிய நட்சத்திர குருபூஜை ஜெயந்தி விழா கோலாகலமாக நடைபெற்றது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி, நமசிவாய சுவாமி சிவயோகி மகேஸ்வரன், சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உப தலைவர் மனோகரன், வேதசகா, தியாக ராஜா சுவாமி உள்ளிட்ட பல உறுப்பினர்கள் பெரும் யாகத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை கிழக்கு பல்கலைக்கழக சித்தமருத்துவ பீட மாணவர்கள் யாகத்தில் ஈடுபட்டனர். விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து உலகப் புகழ் பெற்ற நாதஸ்வர வித்துவான் பாலமுருகன், பிரபல தவில் சக்கரவர்த்தி செந்தில் உள்ளிட்ட குழுவினரும் வருகைதந்து சிறப்பித்தனர்.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து ஐந்து கிலோ மீட்டர் காட்டுக்குள் சென்று அகத்தியர் ஆடி அமாவாசை தீர்த்தமாடிய மகாவலி கங்கை நதி தீரத்தை அடைந்தனர்.

அங்கு சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி குழுவினர் மகாவலிகங்கையில் நீராடி, மரகதலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தனர்.







கங்கைக்கரையில் சிவன் ஆலய பீடம் ஒன்று இருக்கிறது . அங்கு விஷேட யாகமொன்றை சிறப்பாக நடத்தினர்.

வில்வம் இலைகள் மற்றும் மலர்களால் அர்ச்சனை செய்து பாராயணம் செய்தார்கள். 208 சித்தர்களை வரவழைக்கும் மந்திரம் சிவசங்கர் ஜி யால் ஓதப்பட்டது. முறைப்படி சகல ஆகுதிகளும் இடப்பட்டன. குழுவினருடன் பாடசாலை அதிபர் கே.கணேசலிங்கம், சிங்கப்பூர் சித்தர் பக்தரான உஷா உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

இறுதியில் அகத்தியர் ஆலயத்தை அடைந்து அகத்தியருக்கு வஸ்திரம் அணிவித்து விசேட பூஜை செய்து வழிபட்டு விடை பெற்றனர்.

**காரைதீவு குறூப் நிருபர்...**

# பிரேசிலில் வரலாறு காணாத தொடர் வன்முறை; தோல்வியை ஏற்க மறுக்கும் முன்னாள் ஜனாதிபதி

பிரேசிலில் (Brazil) வரலாறு காணாத வன்முறையை அந்நாடு தற்போது கண்டு கொண்டுள்ளது. இறுதியாக நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் அதிபர் போல்சனேரோ (Jair Bolsonaro) தோல்வியடைந்தார். முன்னாள் அதிபரான இடதுசாரி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா (Luiz Inacio Lula da Silva) வெற்றி பெற்றார்.

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இடதுசாரி அரசுகளின் எழுச்சியாக 2018 இல் மெக்சிகோவும், பின்னர் 2019 இல் அர்ஜென்டினாவும் எழுந்தன. மேலும் 2020 இல் பொலிவியாவில் இடதுசாரி அரசு நிறுவப்பட்டது.

அதன்பின் 2021 இல் பெரு, ஹோண்டுராஸ் மற்றும் சிலி, பின்னர் கொலம்பியாவை தொடர்ந்து தற்போது பிரேசில் 2022 இல் இடதுசாரி அரசை அந்நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுத்துள்ளனர்.

பனிப்போரின் உச்சக்கட்ட காலத்தின் போது, லத்தீன் அமெரிக்காவில் தொடர்ச்சியான இடதுசாரி அரசாங்கங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்த அரசாங்கங்கள் பிராந்தியத்தில் அதன் புவிசார் மூலோபாய ஆர்வத்தின் ஒரு பகுதியாக அமெரிக்க அரசாங்கத்தால் நிதியுதவி செய்யப்பட்ட சதிகளை எதிர்கொண்டன.

பிரேசில் இடதுசாரித் தலைவர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா தற்போது அதிபராகப் பதவியேற்றாலும், முன்னாள் அதிபர் ஜெய்ர் போல்சனாரோவும், அவரது ஆதரவாளர்களும் தங்கள் தோல்வியை ஏற்க தயாராக இல்லை. ஜனவரி 2003 முதல் டிசம்பர் 2010 வரை அதிபராக இருந்த லூலா, 31 அக்டோபர் 2022 அன்று நடந்த தேர்தலில் போல்சனாரோவை தோற்கடித்தார். அவர் பதவியேற்ற ஒரு வாரத்திற்குப் பிறகு, பிரேசில் நாட்டில் கலவரங்கள் தீவிரமாக வெடித்தன.

பிரேசிலின் புதிய அதிபராக லூயிஸ் பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிலையில் வாக்கு வித்தியாசம் குறைவாக இருந்ததால் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளாத போல்சனேரோ தனது ஆதரவாளர்களுடன் அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

நாட்டின் தலைநகரில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வாவை எதிர்க்கும் வகையில், தொடர்ந்தும் போல்சனாரோவின் ஆதரவாளர்கள் தலைநகரான பிரேசிலியாவில் அரசு கட்டிடங்களை சூறையாடி வருகின்றனர்.

### புதிய அதிபராக பதவியேற்ற லூயிஸ் டா சில்வா:

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வாவை எதிர்க்கும் வகையில், போல்சனாரோவின் ஆதரவாளர்கள் நாட்டின் தலைநகரான பிரேசிலியாவில் உள்ள அரசு கட்டடங்களை சேதப்படுத்தியுள்ளனர். 'பாசிச தாக்குதல்' என்று அழைக்கப்படும் இந்த தாக்குதலில் பிரேசிலின் முன்னாள் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோவின் நூற்றுக் கணக்கான ஆதரவாளர்கள் நாடாளுமன்றம், அதிபர் மாளிகை மற்றும் உச்ச நீதிமன்ற கட்டடங்களை சேதப்படுத்தினர். அவர்கள் தங்கள் தேர்தல் தோல்வியை ஏற்க மறுத்து வருகின்றனர்.




கடும்போக்கு அரசியல்வாதியான முன்னைய அதிபர் போல்சனாரோவின் ஆதரவாளர்கள் வீடுகளை சேதப்படுத்தியது மட்டுமல்லாமல் அரசாங்க ஆயுதங்களையும் திருடியுள்ளனர். தலைநகரில் வன்முறை பரவியதை அடுத்து, போல்சனாரோ கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரு ட்வீட்டில் அமைதியான ஆர்ப்பாட்டங்கள் ஜனநாயகத்தின் ஒரு பகுதி என்று வலியுறுத்தினார். இதற்கிடையில், சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்க தலைநகர் பிரேசிலியாவுக்கு தேசிய காவலர்களை அனுப்ப லூலா அவசரகால அதிகாரத்தை அறிவித்தார்.



அந்நாட்டிலிருந்து, வெளிவரும் பல வீடியோக்களில், போல்சனாரோவின் ஆதரவாளர்களின் பெரும் கூட்டம் ஜனாதிபதி மாளிகையைச் சுற்றி பிரேசிலிய தேசியக் கொடியில் சூழ்ந்து கொண்டிருப்பதைக் காணலாம். அவர்களை கலைக்க பொலிஸ் துறை புகை குண்டுகளை வீசியது.

பொலிஸ் துறை அதிகாரிகள் குறைந்தது 1500 கலவரக்காரர்களை கைது செய்துள்ளனர். பாதுகாப்புப் படையினர் போராட்டக்காரர்களை கலைத்துள்ளனர், நாடாளுமன்றம், உச்சநீதிமன்றம் மற்றும் அதிபர் மாளிகையைச் சுற்றியுள்ள சூழ்நிலை கட்டுப்பாட்டுக்குள் உள்ளதாக கூறினாலும் தொடர்ந்தும் தீவிரமாக பதற்றம் தொடர்கிறது.

### தோல்வியை ஏற்றுக்கொள்ளாத முன்னாள் அதிபர்:

இதற்கிடையே, பொல்சொனாரோவின் ஆதரவாளர்கள் பிரேசில் நாடாளுமன்றம், அதிபர் மாளிகை, உச்ச நீதிமன்றம் ஆகிய இடங்களுக்குள் புகுந்து வன்முறையில் ஈடுபட்டனர்.

இடதுசாரி லூயிஸ் டா சில்வா அதிபராகத் தெரிவு செய்யப்பட்டதைத் பொல்சொனாரோவின் ஆதரவாளர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். அதிபர் டா சில்வா பதவி விலக வேண்டும் என்றும் இராணுவம் தலையிட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

பொல்சொனாரோ ஆதரவாளர்களின் வன்முறை, ஃபாசிச (fascist) வெறிச்செயல் என்று அதிபர் டா சில்வா கூறியுள்ளார். பிரேசில் தலைநகரில் மத்திய அரசின் தலையீட்டுக்கு உத்தரவிட்ட அவர், சட்ட ஒழுங்கை நிலைநாட்ட அரசாங்கத்துக்குச் சிறப்பு அதிகாரம் தற்போது அளித்துள்ளார்.

முன்னாள் அதிபர் பொல்சொனாரோ தம்முடைய பேச்சின் மூலம் வன்செயல்களை ஊக்குவிப்பதாகத் டா சில்வா குற்றஞ்சாட்டினார்.

கடந்த வெள்ளிக்கிழமை (6 ஜனவரி) டா சில்வா பிரேசில் அதிபராகப் பொறுப்பேற்றார். அதற்குச் சற்று முன்னர் பொல்சொனாரோ புளோரிடா (Florida) புறப்பட்டுச் சென்றார். உண்மையில் அமெரிக்காவிற்கு தப்பிச் சென்றதாகவே கருதுகின்றனர்.

புதிய அதிபர் பதவியேற்கும்போது முன்னைய அதிபர் அவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைப்பது பிரேசிலின் வழக்கம். ஆனால் பொல்சொனாரோ அந்த வழக்கத்தைப் பின்பற்றவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவிற்கு அருகில் இருக்கும் பிரேசிலில் வரலாறு காணாத வன்முறையை அந்நாடு தற்போது கண்டுகொண்டுள்ளது. அமெரிக்காவின் கைப்பிள்ளையே முன்னாள் அதிபரான பொல்சொனாரோ. தற்போது அவர் புளோரிடா (Florida) புறப்பட்டுச் சென்றிருந்தாலும் உண்மையில் அமெரிக்காவிற்கு தப்பிச் சென்றதாகவே கருதுகின்றனர்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# பாகிஸ்தானில் கடும் உணவுத் தட்டுப்பாடு; மோசமான வெள்ள அனர்த்தத்தின் விளைவு

பாகிஸ்தானில் கடுமையான உணவுப் பஞ்சம் நிலவி வரும் நிலையில், சில தினங்களுக்கு முன்பு அங்கு கோதுமைமா வாங்குவதற்கு அலைமோதிய கூட்டத்தில், சிலர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்துள்ளனர். இதற்கிடையில் அடுத்த மூன்று வாரங்களில் பாகிஸ்தான் இன்னும் மோசமான நிலையை எட்டலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் பாகிஸ்தானில் வரலாறு காணாத அளவுக்கு வெள்ளம் ஏற்பட்டது. இதன் காரணமாக வரலாறு காணாத அளவு சேதம் ஏற்பட்டது. உணவு உற்பத்தியானது பெரும் சரிவினைக் கண்டது.

பாகிஸ்தானில் அந்நிய செலாவணி கையிருப்பும் மிகக் குறைவாகவே உள்ளது.




இதனால் இது மேற்கோண்டு பாகிஸ்தானுக்கு சிக்கலாக அமைந்துள்ளது. பாகிஸ்தான் மசகு எண்ணெய், தானியங்கள் உட்பட பல முக்கிய பொருட்களையும் இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதனால் பொருளாதார நெருக்கடி அதிகரிக்கும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

பாகிஸ்தானில் மாத்திரமன்றி உலகின் பல நாடுகளில் பொருளாதார நெருக்கடி காரணமாக உணவுப் பொருட்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகின்றது. மொத்தத்தில் பொருளாதார நெருக்கடி, உணவு நெருக்கடி, நிதி நெருக்கடிக்கு மத்தியில், பாதுகாப்பு என்பதும் சிக்கலுக்குரிய ஒன்றாக மாறியுள்ளது.

(Oneindia tamil)

**அடுத்த 25 ஆண்டுகளுக்காக அரசாங்கத்தின் புதிய சீர்திருத்த திட்டத்துடன் 75 ஆவது தேசிய சுதந்திர தினத்தை பெருமையுடன் கொண்டாட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**



# இலங்கையின் அடுத்த 25 ஆண்டுகளுக்காக புதிய சீர்திருத்த திட்டத்துடன் பெருமைமிகு 75 ஆவது தேசிய சுதந்திரதின விழா

'நமோ நமோ மாதா நூற்றாண்டுக்கு ஒரு படி' என்ற தொனிப்பொருளில் நடைபெறும் இந்த பெருமைமிகு விழாவில், 2048 ஆம் ஆண்டு 100 ஆவது சுதந்திர தினம் வரை மாறாத அரச கொள்கையை அமுல்படுத்தும் வகையில், அடுத்த 25 ஆண்டுகளுக்கு அரசாங்கத்தின் புதிய சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டம் அறிவிக்கப்பட உள்ளது.

தேசிய சுதந்திரதினக் கொண்டாட்டத்தின் பிரதான நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி காலை 8.30 மணிக்கு காலிமுகத்திடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள தேசபிதா டி.எஸ். சேனநாயக்கவின் உருவச்சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திய பின்னர் ஜனாதிபதி செயலக வளாகத்தில் உள்ள தேசிய வீரர்களின் உருவச்சிலைகளுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதையடுத்து வைபவம் ஆரம்பமாகவுள்ளது.

75 ஆவது தேசிய சுதந்திர தின விழாவை முன்னிட்டு நாடு முழுவதும் பல்வேறு கலாசார மற்றும் சமய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையும் விசேட அம்சமாகும்.

அதன்படி, பௌத்த சமய நிகழ்வுகள், பெப்ரவரி 02 ஆம் திகதி மாலை ஸ்ரீ தலதா மாளிகையில் நடைபெறவுள்ளதுடன், அன்றிரவு விக்டோரியா அணைக்கு அருகில் 9:00 மணிக்கு தர்ம பிரசங்கமும் ஆரம்பமாகவுள்ளது. மறுநாள் காலை அன்னதான நிகழ்வும் நடைபெறும்.



## ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் நாடளாவிய ரீதியில் பல்வேறு சமய மற்றும் கலாசார நிகழ்வுகள்

பெப்ரவரி 04 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு மருதானை பாத்திமா தேவாலயத்தில் கத்தோலிக்க மத வழிபாடுகளும், அதே நேரத்தில் காலி முகத்திடல் கிறிஸ்தவ தேவாலயத்தில் கிறிஸ்தவ மத வழிபாடுகளும் நடைபெறவுள்ளன.

இந்து சமய நிகழ்வுகள், பெப்ரவரி 03 ஆம் திகதி காலை திருகோணமலை கோணேஸ்வரம் ஆலயத்தில், இடம்பெறவுள்ளன. பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் முஸ்லிம் சமய வழிபாடுகள் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பிலும் பௌத்த மற்றும் இந்து சமய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் பெப்ரவரி 4 ஆம் திகதி முற்பகல் 6.30 மணிக்கு கொழும்பு 3 பொல்வத்தை தர்மகீர்த்தியாராம விகாரையில் பௌத்த சமய நிகழ்வும், கொழும்பு 4 பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோயிலில் இந்துமத நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் மார்ச் மாதம் ஸ்ரீ தலதா கண்காட்சி, கபில வஸ்து தாது கண்காட்சி, மே மாதம் கொழும்பில் இடம்பெறவுள்ளதுடன், சீனாவில் இருந்து கொண்டுவரப்படும் தாது கண்காட்சி ஜுன் மாதம் அனுராதபுரம் நகரில் நடைபெறவுள்ளது. மேலும் பாகிஸ்தானில் இருந்து கொண்டுவரப்படும் தாது கண்காட்சியொன்றை ஜுலை மாதம் தென் மாகாணத்தில் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட கலாசார கலை விழாவான 'லங்காரலங்கா' பெப்ரவரி 03 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அரச மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த 750 கலைஞர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ளது.

யாழ் கலாசார நிலையம், பெப்ரவரி 11ஆம் திகதி காலை ஜனாதிபதி தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளதுடன், யாழ் கலாசார நிலையத்திற்கு முன்பாக ஆரம்பிக்கும் கலாசார ஊர்வலம் யாழ். நகரின் ஊடாக வீதி உலா வந்து யாழ்ப்பாணம் கோட்டைக்கு அருகில் நிறைவடையும். (பழைய பேருந்து நிலையம்)

அங்கு கலாசார நிகழ்வுகள் நடைபெறவுள்ளதுடன், அன்று இரவு அதே இடத்தில் சிறப்பு இசை நிகழ்ச்சியும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையின் அனைத்து நடன மரபுகளையும் ஒன்றிணைத்து, வீதி உலாவரும் ஊர்வலம் எதிர்வரும் பெப்ரவரி 19 ஆம் திகதி இரவு கண்டி நகரில் உள்ள ஸ்ரீ தலதா மாளிகையில் பூரண பங்கேற்புடன் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சுதந்திரம் தொடர்பான 30 நிமிட குறும்படமொன்றை தயாரித்து அனைத்து திரையரங்குகளிலும் கலையரங்குகளிலும் காண்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், இளைஞர் சமுதாயத்தை இலக்கு வைத்து 'சுதந்திரம்' என்ற தலைப்பில் குறும்படங்கள், தேசபக்தி பாடல்கள் மற்றும் ஓவியப் போட்டிகள் உள்ளிட்ட வடிவமைப்புப் போட்டியொன்றை மே மாதம் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாட்டின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் மாபெரும் ஓவியப் போட்டி மற்றும் கண்காட்சி சிரேஷ்ட ஓவியக் கலைஞர் எச்.எஸ். சரத் தலைமையில் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பௌத்த சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, தேசிய அருங்காட்சியக திணைக்களம், மத்திய கலாசார நிதியம் மற்றும் தொல்பொருள் திணைக்களம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இலங்கையின் வரலாற்றை பிரதிபலிக்கும் கலைப் பொருட்கள் கண்காட்சி பெப்ரவரி 04 ஆம் திகதி முதல் பெப்ரவரி 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தேசிய சுதந்திரதின விழாவின் போது பத்திரிகைச் செய்திகள் மற்றும் பிற கட்டுரைகள் அடங்கிய புத்தகம் வெளியிடப்பட உள்ளது. 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு விசேட முத்திரை ,சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர் தேசபிதா டி.எஸ். சேனநாயக்க ,சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு மற்றும் சுதந்திர பாகிஸ்தானின் முதல் பிரதமர் முஹம்மது அலி ஜின்னா ஆகியோரின் உருவப்படங்களை உள்ளடக்கிய அரிய வகை விசேட நினைவு முத்திரையையும் வெளியிடப்பட உள்ளன. மேலும் ரூ.1000 மதிப்புள்ள சிறப்பு நினைவு நாணயமும் வெளியிடப்படும்.

ஜனவரி 01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்ட நகர்ப்புற வன எண்ணக்கரு நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படுவதுடன், ஸ்ரீலங்கா டெலிகொம் அனுசரணையுடன் பருத்தித்துறையில் இருந்து தேவேந்திரமுனை வரையிலான சுதந்திர தின சைக்கிள் சவாரி ஜனவரி 28 ஆம் திகதி முதல் பெப்ரவரி 01 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இது தவிர, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் சுதந்திரதின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு பொது பூங்காக்கள், தேசிய விலங்கியல் திணைக்களத்திற்கு வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்புத் திணைக்களத்திற்குரிய தேசிய பூங்காக்கள் மற்றும் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்திற்குரிய தேசிய பூங்காக்கள் என்பன சுதந்திர தினத்தில் பொதுமக்களுக்காக இலவசமாக திறக்கப்படும்.

குறைந்த வருமானம் பெறும் 02 மில்லியன் குடும்பங்களுக்கு 02 மாதங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 10 கிலோ வீதம் அரிசி வழங்கும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், குறித்த வேலைத்திட்டம் மாவட்ட அரசாங்க அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

2023 ஆம் ஆண்டு 75 ஆவது சுதந்திர தினத்துடன் ஆரம்பிக்கும் அரசாங்கத்தின் புதிய சீர்திருத்தப் பயணத்தை 2048 ஆம் ஆண்டு 100 ஆவது சுதந்திர தினம் வரையில் மாற்றமில்லாத அரச கொள்கையாக மாற்றுவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் நோக்கமாகும். எதிர்வரும் 25 வருடங்களுக்கான திட்டமும் இந்த தேசிய சுதந்திர தினத்துடன் இணைந்ததாக முன்னெடுக்கப்படும்.

இதன்படி, பல புதிய நிறுவனங்கள் மற்றும் சட்டங்கள் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், இலங்கையின் வரலாற்றை ஆய்வு செய்வதற்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் ஒரு வரலாற்று நிறுவனம், பொருளியல் மற்றும் வர்த்தக நிறுவனம் , பெண்கள் மற்றும் பாலினம் தொடர்பான நிறுவனம் என்பன நிறுவப்படும்.

அரச மற்றும் அரசாங்கக் கொள்கைப் பல்கலைக் கழகம், விவசாய ஆராய்ச்சிப் பல்கலைக்கழகம், காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் என்பனவும் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பெண்கள் தொடர்பான தேசிய ஆணைக்குழு , பாலின சமத்துவச் சட்டம், பெண்களுக்கு அதிகாரமளிக்கும் சட்டம், குழந்தைகள் பாதுகாப்புச் சட்டம், காலநிலை மாற்றம் தொடர்பான சட்டம், சமூக நீதிக்கான ஆணைக்குழுச் சட்டம், காடுகளை மீள உருவாக்கல் மற்றும் விருட்சப் பாதுகாப்புச் சட்டம் என்பனவும் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

மகாவலி கங்கை, சிங்கராஜ வனம் , சிவனொளிபாத பிரதேசம், ஹோர்டன் சமவெளி, நக்கிள்ஸ், ஆதாம் பாலம் போன்ற இயற்கை வளங்களின் பாதுகாப்பிற்காக புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

கடல் வள ஆய்வு மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் புதிய சட்டங்கள் மற்றும் முதுராஜவெல பாதுகாப்பு சட்டமும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதில் 75 நகர்ப்புற காடுகளின் திட்டம் மற்றும் கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கொழும்பில் 1996 வீடுகள் கட்டும் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளதோடு தேசிய இளைஞர் தளம் உட்பட பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

# மத்திய கிழக்குடன் பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கம் கொண்டுள்ள நெருங்கிய நல்லுறவு

**இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி கடந்த எட்டு ஆண்டுகளாக பதவி வகித்து வருகிறார். வளைகுடாவின் இஸ்லாமிய நாடுகளுடனான உறவை வலுப்படுத்தும் விடயத்தில் அவர் தீவிர கவனம் செலுத்தி வருகின்றார்.**

கடந்த எட்டு ஆண்டுகளில் பிரதமர் மோடி ஐக்கிய அரபு அமீரகத்திற்கு நான்கு முறை பயணம் மேற்கொண்டார். முதல் பயணம் 2015 ஓகஸ்ட் மாதத்திலும், இரண்டாவது பயணம் 2018 பெப்ரவரியிலும், மூன்றாவது பயணம் 2019 ஓகஸ்டிலும் மேற்கொள்ளப்பட்டது.

பிரதமர் மோடி நான்காவது முறையாக 2022 ஜுன் மாதத்தில் ஐக்கிய அரபு அமீரகத்திற்குச் சென்றார். 2015 ஓகஸ்டில் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு அவர் மேற்கொண்ட பயணம், 34 ஆண்டுகளில் இந்தியப் பிரதமர் ஒருவர் அந்த நாட்டிற்கு மேற்கொண்ட முதல் பயணமாக அமைந்தது. இதற்கு முன்னர் இந்திரா காந்தி 1981 இல் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றிருந்தார்.

கடந்த ஆண்டு ஜுன் 28 ஆம் திகதி, பிரதமர் நரேந்திர மோடி அபுதாபி விமான நிலையத்தில் தரையிறங்கிய போது, ஐக்கிய அரபு எமிரேட்ஸின் மன்னர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் அவரை வரவேற்பதற்காக அங்கு காத்திருந்தார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மன்னர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் விமான நிலையத்தில் பிரதமர் மோடியை வரவேற்பதற்காக நின்றிருந்தமை நெறிமுறைகளுக்கு எதிரானது. ஆனாலும் அதை இந்தியப் பிரதமருக்காக அவர் பொருட்படுத்தவில்லை.



பிரதமர் மோடிக்கு கிடைத்த இந்த வரவேற்பு குறித்து பாகிஸ்தானில் பரபரப்பாகப் பேசப்பட்டது. பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீப் கடந்த மே மாதம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றபோது அவரை அமைச்சர் ஒருவர் வரவேற்றதாக இந்தியாவுக்கான பாகிஸ்தான் முன்னாள் உயர்ஸ்தானிகர் அப்துல் பாஸித் தெரிவித்திருந்தார். இந்தியாவுக்கு அளிக்கப்பட்ட இந்த கௌரவம் கவலையளிக்கிறது என்று அப்துல் பாஸித் கூறியிருந்தார்.

ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானுடன் நரேந்திர மோடி ஆழ்ந்த நட்பை ஏற்படுத்திக் கொண்டதாகக் கூறப்படுகிறது. 2017ஆம் ஆண்டு குடியரசு தினவிழாவில் முகமது பின் சயீத் அல் நஹ்யானை சிறப்பு விருந்தினராக மோதி அரசு அழைத்திருந்தது.

அப்போது முகமது பின் சயீத் அல் நஹ்யான் ஐக்கிய அரபு அமீரகத்தின் மன்னராக இருக்கவில்லை. அபுதாபியின் பட்டத்து இளவரசராக அவர் இருந்தார். பாரம்பரியப்படி, குடியரசு தினத்தில் ஒரு நாட்டின் பிரதமரையோ அல்லது ஜனாதிபதியையோ தலைமை விருந்தினராக அழைப்பது வழக்கம். ஆனால் 2017 குடியரசு தின விழாவில் அல் நஹ்யான் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார்.

சவூதி மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இளவரசர்கள் இருவரும், பிரதமர் மோடியின் நடைமுறை அரசியல் பாணியையும், வலிமையான தலைவர் என்ற பிம்பத்தையும் விரும்புகிறார்கள் என்று அபுதாபியில், மேற்கத்திய நாட்டின் முன்னாள் தூதுவர் ஒருவர் கூறினார்.

பிரதமர் மோடி 2016 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் சவூதி அரேபியாவிற்கு பயணம் செய்திருந்தார். 2019 இல் பஹ்ரைன் மற்றும் 2018 இல் ஓமான், ஜோர்டன், பாலஸ்தீனிய பிரதேசம் மற்றும் 2016 இல் கட்டார் ஆகிய நாடுகளுக்கும் அவர் சென்றிருந்தார்.



பிரதமர் மோடி 2015 இல் ஷேக் சயீத் கிராண்ட் மசூதி மற்றும் 2018 இல் ஓமன் சுல்தான் கபூஸ் கிராண்ட் மசூதிக்கும் சென்றிருந்தார். நரேந்திர மோடிக்கு சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகளின் உயரிய குடிமகன் விருதுகளும் வழங்கப்பட்டன.

2019 பெப்ரவரியில் புதுடில்லியில் நடந்த ஒரு விழாவில் நரேந்திர மோடியை தனது 'மூத்த சகோதரர்' என்று சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் அழைத்திருந்தார்.

2019 பெப்ரவரியில் சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான், இந்தியா வந்தார். புதுடில்லி விமான நிலையத்தில் பட்டத்து இளவரசர் தரையிறங்கிய போது, அவரை வரவேற்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிஅங்கு நின்றிருந்தார். பிரதமர் மோடி வரைமுறைகளை மீறி விமான நிலையத்திற்கு சென்றார்.

அப்போது பட்டத்து இளவரசர் சவூதி அரேபியாவின் பிரதமராகக்கூட இருக்கவில்லை. இந்த பயணத்தின் போது புதுடில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகையில் சவூதி இளவரசர், "நாங்கள் இருவரும் சகோதரர்கள். பிரதமர் மோடியின் மூத்த சகோதரர். நான் அவருடைய இளைய சகோதரன். நான் அவரைப் பாராட்டுகிறேன். அரேபிய தீபகற்பத்துடனான இந்தியாவின் உறவு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழைமையானது. அரேபிய தீபகற்பத்திற்கும் இந்தியாவிற்கும் உள்ள தொடர்பு நமது டி.என்.ஏயில் உள்ளது" என்று கூறியிருந்தார்.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணமாக வந்திருந்த முகமது பின் சல்மான், "கடந்த 70 ஆண்டுகளாக இந்திய மக்கள் நண்பர்களாகவும், சவூதி அரேபியாவைக் கட்டியெழுப்புவதில் பங்குதாரர்களாகவும் உள்ளனர்" என்று கூறியிருந்தார்.

2014 இல் நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்த பிறகு, வளைகுடா நாடுகளுடனான இந்தியாவின் உறவு வலுப்பெற்றுள்ளதாக பல நிபுணர்கள் கருதுகின்றனர்.

"பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியின் கீழ் அரபு நாடுகளுடனான உறவுகள் வலுப்பெற்றுள்ளன. இந்தியாவில் உள்ள இஸ்லாமிய பாரம்பரியம் நமது பொதுவான கலாசாரத்தின் ஒரு பகுதியாகும் என்றும் அரபு நாடுகளுடனான நட்பை வலுப்படுத்த இது அதிகம் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன்" என்று லிபியா மற்றும் ஜோர்டானுக்கான இந்திய தூதுவராக இருந்த அனில் திரிகுணாயத் குறிப்பிட்டிருந்தார்.

"சுமார் 90 இலட்சம் இந்தியர்கள் வளைகுடா நாடுகளில் தொழில் செய்கிறார்கள். இந்தியர்கள் தங்கள் கடின உழைப்பாலும் நேர்மையாலும் இந்த நாடுகளில் நற்பெயரைப் பெற்றுள்ளனர். அவர்களின் உழைப்பைக் களங்கப்படுத்தும் எதுவும் நமது உள்நாட்டு அரசியலில் நடக்கக் கூடாது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.



இந்த நாடுகளில் இந்தியாவுக்கு நல்ல நன்மதிப்பு உள்ளது. அதை வலுப்படுத்த நரேந்திர மோடி அரசும் கடுமையாக உழைத்துள்ளது. சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் பிரதமர் நரேந்திர மோடிக்கு தங்களது உயரிய சிவிலியன் விருதுகளையும் வழங்கியுள்ளன" என்று அனில் திரிகுணாயத் மேலும் கூறியுள்ளார்.

பல முக்கியமான துறைகளில் வளைகுடா நாடுகளுடனான இந்தியாவின் ஒத்துழைப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. எரிசக்தி மற்றும் பாதுகாப்புத் துறைகளில் இந்த நாடுகளுடன் இந்தியா பல முனைகளில் இணைந்து செயற்படுகிறது.

சவூதி அரேபியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் கடந்த இரண்டு தசாப்தங்களாக இந்தியாவின் தேசிய உள்கட்டமைப்பில் முதலீடு செய்து வருகின்றன. இது தவிர இந்தியாவுடனான இரு நாடுகளின் எண்ணெய் அல்லாத வர்த்தகம் அதிகரித்துள்ளது. இந்தியாவில் இருந்து அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதியும் அதிகரித்துள்ளது.

இந்தியாவின் நான்காவது பெரிய வர்த்தக பங்காளியாக சவூதி அரேபியா உள்ளது. இந்தியா தனது மசகு எண்ணெய் தேவையில் 18% மற்றும் LPG யின் 22 சதவீதத்தையும் சவூதி அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹாரிஸ்பத்துவ பிரதேசத்தில் வெண்ணிலா உற்பத்தி கிராமம்





**கண்டி மாவட்டத்தில் உள்ள ஹாரிஸ்பத்துவ பிரதேசத்தில் வெண்ணிலா உற்பத்தி கிராமமொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையினை கண்டி மாவட்ட செயலகம் முன்னெடுத்துள்ளது.**

சௌபாக்கிய கிராம உற்பத்திக்கான வேலைத்திட்டத்தின் கீழ் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற இந்த வேலைத்திட்டத்தினை கண்டி மாவட்ட செயலகம் மேற்பார்வை செய்ய உள்ளது.

இதன்படி, மேற்படி முன்னோடித் திட்டத்திற்காக இந்தப் பிரிவில் உள்ள 75 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் மொஹான் தர்மதாச தெரிவித்தார்.

சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவேல் தலைமையில் தெம்பரலாவ கிராமத்தில் இந்த கள விஜயம் மேற்கொள்ளப்பட்டு,விடயங்கள்அவதானிக்கப்பட்டுள்ளன. விவசாயத்திற்குரிய தரமான வாசனைத் திரவியங்களை கொண்ட இந்த வெண்ணிலா என்ற பொருட்களுக்கு தேசிய தரத்தில் சந்தையொன்று உருவாக்கப்பட்டு அங்கு அதிக தரமான பொருட்கள் முன்வைக்கப்பட வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர், சலுகை அடிப்படையில் கடன் வசதிகள் வழங்கப்பட்டுவதுடன் குறித்த சந்தை விரிவாக்கம் செய்யப்படும் என்றும் குறிப்பிட்டார்.

கண்டி மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான குணதிலக்க ராஜபக்ஷ, கண்டி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரம்யா விஜேசுந்தர உள்ளிட்ட குழுவினர் இந்த கள நிகழ்வில் கலந்து கொண்டனர்.

எம்.ஏ.அமீனுல்லா...

## நீதி, நியாயத்தை ...

தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இதனை தற்போதைய ஆட்சியாளர்கள் போன்றே எதிர்கால ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரிகள் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு செயற்பட வேண்டும் என்றும் பேராயர் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலை தடுப்பதற்கான தகவல்கள் கிடைத்திருந்தும் அதனை தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறிய குற்றத்திற்காக உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தரப்பினருக்கு வழங்கியுள்ள தீர்ப்பு தொடர்பில் நேற்று கொழும்பிலுள்ள பேராயர் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும் போதே பேராயர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டுத் தாக்குதல் சம்பவங்களின் பின்னணியிலுள்ள உண்மை மற்றும் சூழ்ச்சிகள் வெளிவரும் வரை அதற்கான நடவடிக்கைகளை கைவிடப் போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## உள்ளூராட்சி சபை...

நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

அதன்போது மேற்படி மனுவை எதிர்வரும் 18 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளதாக நீதிபதிகள் குழாம் தெரிவித்தது.

உள்ளூராட்சித் தேர்தலை மார்ச் 10ஆம் திகதிக்கு முன்னர் நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்ட தீர்மானத்தை இரத்துச் செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு ஓய்வு பெற்ற கேர்ணல் விஜேசுந்தர தனது மனுவில் நீதிமன்றத்திடம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கோவோவேக்ஸ் தடுப்பூசி ...

எடுத்துக்கொள்ள இந்திய மத்திய மருந்து கட்டுப்பாட்டு பணிப்பாளர் ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளார்.

தற்போது சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் உருமாறிய கொரோனா தொற்றின் ஆதிக்கம் அதிகரித்து வருவதால், இந்த தடுப்பூசியின் விற்பனைக்கு அனுமதிக்குமாறு சீரம் நிறுவனம் மருந்து கட்டுப்பாட்டு பணிப்பாளருக்கு கோரிக்கை விடுத்திருந்தது.

இதைத் தொடர்ந்து இந்திய மத்திய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் நிபுணர் குழு இது குறித்து பரிசீலனை நடத்தியது.

இந்நிலையில், கோவோவேக்ஸ் தடுப்பூசிக்கு சந்தை அங்கீகாரம் வழங்க நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளதாக தகவல் வெளியானது.

குறிப்பாக, கோவேக்சின் அல்லது கோவிஷீல்டு தடுப்பூசியின் 2 டோஸ் போட்டுக்கொண்ட 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஒரு பூஸ்டர் டோசாக இதை பயன்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## பாடசாலை சீருடை...

சீனாவினால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணி நேற்று இலங்கையிலுள்ள பதில் சீனத் தூதுவர் ஹு வெய் யினால் கல்விஅமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிடம் கொழும்பு துறைமுகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

மாணவர்களுக்கு வழங்குவதற்கு வசதியாக சீருடைத்துணிகள் யாவும் வெட்டப்பட்டு பொதியிடப்பட்டுள்ளது. சீருடைத்துணிகளின் எஞ்சிய 30 வீதமானவை விரைவில் கிடைக்குமென்றும் கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை 2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைகள் எதிர்வரும் மார்ச் 20ஆம் திகதிக்கு முன்பதாக நாட்டிலுள்ள 41 இலட்சம் மாணவர்கள், பிரிவெனாக்கள் மற்றும் அரசாங்கத்தின் அனுசரணையில் இயங்கும் பாடசாலைகள் அனைத்துக்கும் வழங்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் இந்த வருடத்தில் பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவு வழங்குவதற்காக சீனாவினால் நன்கொடையாக வழங்கப்படும் அரிசி முழுமையாக இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் பதில் சீனத் தூதுவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

## மட்டக்களப்பு, அம்பாறைக்கு ... ...

கட்டுப்பணத்தை நேற்று செலுத்தியதன் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

திருகோணமலை மாவட்டத்தில் சனிக்கிழமை (இன்று 14) கட்டுப்பணம் செலுத்தவுள்ளோம், அதேபோன்று யாழ் மாநகர சபை மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தில் தமிழர் செறிந்து வாழும் பிரதேசங்களில் தனித்துவமாக உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கட்டுப்பணம் செலுத்தும் நிகழ்வின்போது தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன், தேசிய பொருளாளர் ஆறுமுகம் தேவராஜா உட்பட தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

## நீதி அமைச்சர் விஜயதாச... 03ஆம் பக்கத் தொடர்

அமைச்சரால் உயர்ஸ்தானிகருக்கு விளக்கமளிக்கப்பட்டது. இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்காக தமது நாட்டின் ஆதரவு பெற்றுக்கொடுக்கப்படுமென்றும் இரு நாடுகளுக்குமிடையிலான அரசியல் மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்த தான்முன்னின்று செயற்படுவதாகவும் இலங்கைக்கான இந்தோனேசிய தூதுவர் Dewi Gustina Tobing கூறினார்.

## கடனை திருப்பிச் செலுத்த... 03ஆம் பக்கத் தொடர்

மாதத்துக்குள், அந்தக்கடனைத் திருப்பிச் செலுத்தத் திட்டமிடப்பட்டது, ஆனால் அதைச் செய்யத் தவறி விட்டது.

இலங்கை அந்நிய செலாவணி இருப்புக்களின் கடுமையான பற்றாக்குறையை எதிர்கொள்வதையடுத்து கடனை திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடிக்குமாறு கோரிக்கை விடுத்தது.

புதிய காலக்கெடுவின்படி, இந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்துக்குள் இலங்கை கடனை திருப்பிச் செலுத்த வேண்டும்.

பங்களாதேஷூம் ஏற்கனவே சர்வதேச நாணய நிதியம் உட்பட பல்தரப்பு கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கடன் உதவியை நாடியுள்ளது.

பங்களாதேஷ் மத்திய வங்கியின் தரவுகளின்படி, பங்களாதேஷின் கையிருப்பு 2023 ஜனவரி 11 அன்று 32.52 பில்லியன் டொலர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## Tax on noncash benefits... 03ஆம் பக்கத் தொடர்

வர்த்தமானி அறிவித்தலுக்கு அனுமதி வழங்கிய குழு சுற்றுலா, அலங்காரத்துறை போன்ற துறைகளுக்கு தேவையான தயாரிப்புக்களை உரிய நிறுவங்களின் பரிந்துரையின் அடைப்படையில் கொண்டுவருவதற்கு அனுமதி வழங்குவதை விட, அதிக வரி விதித்தாவது இறக்குமதிக்கு இடமளிப்பது பொருத்தமானதென தெரிவித்தது. அவ்வாறில்லையெனில் கருப்பு சந்தை உருவாகுவதைத் தடுக்க முடியாமல் போகுமென குழுவில் கலந்துரையாடப்பட்டது.

2308/51 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வெளிநாட்டு செலாவனி சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளுக்கும் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர்களான கலாநிதி சுரேன் ராகவன், பாரளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி, சஹன் பிரதீப் விதான மற்றும் மதுர விதானகே ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## கஞ்சாவுடன் கைதான... 03ஆம் பக்கத் தொடர்

பிரிவுக்கு பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமார ஹேரத்தின் பணி இடைநீக்கம், கடந்த 10 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் உலர்த்துவதற்காக தயார் செய்யப்பட்டிருந்த சுமார் 650 கஞ்சா செடிகளை விசேட அதிரடிப்படை கண்பிடித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், சம்பவம் தொடர்பில் எதிமலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமாரவின் உத்தியோகபூர்வ சாரதியாக கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள், வீட்டில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட், மொனராகலை பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் மற்றும் மொரட்டுவ மற்றும் எகொடவுயன பிரதேசங்களை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# தே.ம.சக்தி நுவரெலியாவில் கட்டுப்பணம் செலுத்தியது




ஹற்றன் சுழற்சி நிருபர்

உள்ளூராட்சித் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 12 சபைகளுக்கும் போட்டியிடுவதற்காக தேசிய மக்கள் சக்தி கட்சி நேற்று (13) கட்டுப்பணம் செலுத்தியது.

தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் மஞ்சுள சூரவீர உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள், மாவட்ட தேர்தல் அலுவலகத்துக்கு சென்று கட்டுப்பணம் செலுத்தினர்.

நுவரெலியா மாநகரசபை, தலவாக்கலை லிந்துலை நகர சபை, ஹற்றன் டிக்கோயா நகரசபை மற்றும் 09 பிரதேச சபைகளுக்கே இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

## மாவனல்லை பிரதேச சபை...

திட்டத்துக்கு அனுமதி வழங்குவதற்காக அவர் இலஞ்சம் கோரியதாக தெரிவிக்கப்படுகிறது. இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்தின் (CIABOC) அதிகாரிகளால் இவர் கைது செய்யப்பட்டார்.

## முட்டை பாணுக்குள்...

இவர் முட்டை பாண் உள்ளிட்ட உணவுகளை காலை உணவாக மாமாவிடம் கொடுப்பதற்காக பொலிஸ் நிலையத்துக்கு வந்ததாகவும் இவற்றை மாமாவிடம் கொடுக்க வேண்டுமென பொலிஸாரிடம் தெரிவித்த போது அவற்றை பொலிஸார் தீவிரமாக சோதனையிட்டனர்.

முட்டை பாணின் நடுப்பகுதி பிரிக்கப்பட்டு, உள்ளே வைக்கப்பட்டுள்ள வெங்காயத்தினடையே பொலித்தீனால் சுற்றப்பட்ட சுமார் ஐந்து கிராம் நூறு மில்லிகிராம் போதைப்பொருளை பொலிஸார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வனாத்தமுல்லை பிரதேசத்தை சேர்ந்த பத்தொன்பது வயதுடையவரென தெரியவந்துள்ளது.

பொரளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் ஜானக பிரியதர்ஷன விதானகேவின் பணிப்புரையின் பேரில் உப பொலிஸ் பரிசோதகர் உபுல் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

## Online இல் சேவை...

சாரதி அனுமதிப் பத்திரங்களுக்குப் பயன்படுத்தப்படும் புகைப்படங்களுக்கும், வாகனப் பதிவு மற்றும் மாற்றத்துக்குப் பயன்படுத்தப்படும் புகைப்படங்களுக்கும் இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அகில இலங்கை நிபுணத்துவ புகைப்பட நிலைய உரிமையாளர்கள் சங்கத்தில் சுமார் 7,000 உறுப்பினர்களுக்கு புகைப்பட நிலையங்கள் உள்ளதாகவும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இந்த புகைப்படச் சேவைகளை வினைத்திறனுடன் வழங்குவதற்கான வசதிகள் உள்ளதாகவும் சங்கத்தின் அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

அனைத்து இலங்கை நிபுணத்துவ புகைப்படச் சேவைகள் நிலைய உரிமையாளர்கள் சங்கம் தேவையான Aikavo மென்பொருள் அமைப்பை நிறுவுவதற்கான செலவை ஏற்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன. அதன் பராமரிப்புக்காக வருடாந்தம் உரிமக் கட்டணத்தையும் செலுத்த அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அகில இலங்கை புகைப்படச் சேவை உரிமையாளர்கள் சங்கத்தினருக்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

## ரெஜினோல்ட் குரே...

பிரதி அமைச்சர், வெகுஜன ஊடக அமைச்சர், நீதி பிரதி அமைச்சர், சிறு ஏற்றுமதி பயிர் ஊக்குவிப்பு அமைச்சர், விமானப் போக்குவரத்து அமைச்சர், வடமாகாண ஆளுநராக பதவிகளை வகித்திருந்தார். இரத்தினம் மற்றும்ஆபரண ஆணைக்குழுவின் தலைவராகவும் அவர் பதவி வகித்தார். பூதவுடல் 18ம் திகதி வரை அன்னராரது களுத்துறை போம்புவள இல்லத்தில் வைக்கப்பட்டு போம்புவள மயானத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடுகதி ரயில்...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் இருந்து அதிகாலை 1.30 மணியளவில் புறப்பட்ட ரயில், ஹதரஸ்கொட்டுவ பிரதேசத்திற்கு அருகில் 5.05 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து ரயில் இயந்திரமும் மற்றொரு பெட்டியும் தடம் புரண்டுள்ளன.

இதன் காரணமாக மட்டக்களப்பு கொழும்பு ரயில் சேவைகள் தற்காலிகமாக நேற்று இடைநிறுத்தப்பட்டு தண்டவாளத்தை சீர்செய்யும் பணிகள் இடம்பெற்றதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

## ஐந்து தமிழ் கட்சிகள் ...

புதிய கூட்டணி அமைப்பது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நேற்று காலை ஆரம்பித்த சந்திப்பின் பின்னர் கூட்டணி தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

சின்னம் தொடர்பில் இழுபறி காரணமாக சீ.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் மணிவண்ணன் அணியினர் இடைநடுவில் நேற்று கூட்டத்திலிருந்து வெளியேறினர்.

இந்நிலையில் மீதமிருந்த ஏனைய கட்சிகள் உடன்பாட்டுக்கு வந்து கூட்டணி அமைக்க முடிவு எடுத்தன. தமிழரசி கட்சி தனியாக போட்டியிட முடிவெடுத்த பின்னர் ஏனைய தமிழ் தேசிய கட்சிகளை இணைத்து இக் கூட்டணி உருவாக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இக் கூட்டணி போட்டியிடவுள்ளது. இது தொடர்பாக ஆராய்ந்து இன்று காலை 10 மணிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என அவர் தெரிவித்தார்.

# முதலாவது ஆண்டில் வெற்றிகரமாக தடம் பதிக்கிறது கனடா Eye தமிழ் தொலைக்காட்சி

2022 ஜனவரி 14ம் திகதி கனடாவின் மொன்றியல் நகரை மையமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது Eye tamil தொலைக்காட்சி. இது 4k தொழில் நுட்பத்தில் இயங்குகிறது. இலங்கையின் பிரபல வானொலி தொலைக்காட்சி தொகுப்பாளர் NP பிரதாப்பின் தலைமையில் இலங்கை ஊடகங்களின் மூலம் நன்கு அறியப்பட்ட தொகுப்பாளர்கள் மற்றும் புதியவர்களும் இணைந்து தங்களின் திறமைகளை சர்வதேச பரப்பில் Eye tamil தொலைக்காட்சி வாயிலாக காண்பித்து தமிழ் ரசிகர்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையில் ஊடக கனவோடு வாய்ப்பு தேடி கிடைக்காத பலருக்கு Eye tamil தொலைக்காட்சி வாயிலாக வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கிறது. இது ஐ தமிழ் tv தமிழரின் அடையாளம் என்ற மகுட வாசகத்தோடு ஒளிபரப்பாகிறது. நிகழ்ச்சிகளில் புதுமைகளோடு காலத்திற்கேற்ப நிகழ்ச்சிகளை Eye தமிழ் தொலைக்காட்சி வழங்குகிறது. பிரதான செய்தி அறிக்கை கடல் கடந்து வாழும் எம் மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்கிறது.

கடந்த ஒரு வருடத்தில் மக்கள் மனதில் எமக்கென தனி இடம் ஒன்றினை பிடித்திருக்கிறோம். இலங்கை மக்கள் தற்போது www.eye tamil.tv என்னும் இணையத்தளமூடாக எமது நேரடி ஒளிபரப்பை நிகழ்ச்சிகளை பார்வையிட முடியும். வெகு விரைவில் இலங்கை மக்களும் Eye தமிழ் தொலைக்காட்சின் நிகழ்ச்சிகளை சாதாரண அலைவரிசைகளில் பார்வையிடுவதற்கான பணிகள் இடம் பெறுகிறது என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம்.இலங்கை கலைஞர்கள் தங்கள் படைப்புகளை சர்வதேச தளத்திற்கு கொண்டு செல்வதற்கான வாய்ப்பாகவும் Eye தமிழ் தொலைக்காட்சி காணப்படுகிறது. எம் கலைஞர்களுக்கு சர்வதேச அரங்கில் ஒரு அங்கீகாரமாக Eye தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை படைக்கிறது சந்தர்ப்பங்களையும் வழங்குகிறது.

அது மட்டுமன்றி Eye tamil media network இல் மற்றொரு அங்கமாக eye foundation செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதனூடாக வறிய மக்களுக்கான நலத்திட்டங்கள், ஏழை மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை, கற்றல் உபகரணங்கள் என உதவிகளை வழங்கி வருகிறோம். மலையகம், வவுனியா, யாழ்ப்பாணம், வன்னி என உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கிறது. இன்று 14.01.2023 முதலாவது ஆண்டில் வெற்றிகரமாக தடம் பதிக்கிறது Eye தமிழ் தொலைக்காட்சி.

## இலங்கை மதுபான...

மதுபான வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ள இராஜாங்க அமைச்சர், தென்னங்கள்ளு மற்றும் கித்துள் கள்ளு ஆகியவற்றுக்கு உலகின் பல்வேறு நாடுகளிலும் சிறந்த கேள்வி நிலவுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மின்கட்டண...

அலகிற்கான நிலையான கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், 0 – 30 அலகுகளுக்கான நிலையான கட்டணம் 120 ரூபாவிலிருந்து 400 ரூபா வரையிலும் 31 – 60 அலகுகளுக்கான நிலையான கட்டணம் 240 ரூபாவிலிருந்து 550 ரூபா வரையிலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. 60–90 அலகுகளுக்கான நிலையான கட்டணம் 650 ரூபாவாகவும் 90 – 180 அலகுகள் வரையான நிலையான கட்டணம் 1500 ரூபாவாகவும் அமைந்துள்ளன. 180 அலகுகளுக்கு மேல் 1500 ரூபாவாக இருந்த நிலையான கட்டணம் 2000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. மத வழிபாட்டுத் தலங்களுக்கான கட்டணங்களிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி 0–30 அலகுகளுக்கு 400 ரூபா, 31– 90 அலகுகளுக்கு 550 ரூபா, 90 –120 அலகுகளுக்கு 650 ரூபா, 120 – 180 அலகுகளுக்கு 1500 ரூபா என்ற வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## மட்டுகொழும்பு...

பயணித்த பஸ் நேற்று (13) வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு மட்டு ஊறணி சந்திக்கருகில் வேககக் கட்டுப்பாட்டை மீறி வீதியோரமாக இருந்த பனைமரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. பஸ்சின் முன்னால் திடீரென குறுக்கே வந்த துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபரை காப்பாற்ற முயற்சித்த வேளையிலேயே பஸ் பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதாக பஸ் நடத்துனர் தெரிவித்தார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## இலங்கைப் பெண்...

ஓமானில் உள்ள இலங்கை தூதரகத்தில் பாதுகாப்பகத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த போதே நோய்வாய்ப்பட்டு அப்பெண் உயிரிழந்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. அவர் இலங்கைக்கு புறப்படுவதை எதிர்பார்த்திருந்தபோது நோய்வாய்ப்பட்டதாகவும், ஓமானிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்ததாகவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.




# கிழக்கின் குரல்



## அம்பாறையில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறிய 34 வர்த்தகர்களுக்கு அபராதம்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் கடந்த டிசெம்பரில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 34 வர்த்தகர்கள் மீது, நீதிமன்றங்களினால் ஒரு இலட்சத்து 57 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ.றிஸ்லி தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறிக் கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து, மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸின் ஆலோசனைக்கமைய, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிய பண்டார தலைமையில் சுற்றிவளைப்புகளை, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்டனர்.



அம்பாறை, தெஹியத்தகண்டி, அக்கரைப்பற்று, பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்துக்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட 76 சுற்றிவளைப்புகளில், நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட 34 வழக்குகளுக்கே மேற்படி அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை விட, கூடுதல் விலைக்கு அரிசி மற்றும் முட்டை உள்ளிட்ட பொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்கள் மீதே நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும், அவர் தெரிவித்தார்.

## பதினாறு உள்ளூராட்சி மன்றங்களுக்கு த.ம.வி.பு. கட்சி கட்டுப்பணம் செலுத்தியது

**புதிய காத்தான்குடி தினகரன், கல்லடி, மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்**

மட்டக்களப்பு மற்றும் கல்முனை மாநகர சபைகள் உட்பட கிழக்கு மாகாணத்தில் 16 உள்ளூராட்சிமன்றங்களுக்கு தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி நேற்று முன்தினம் (12) கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியானது, மட்டக்களப்பு மற்றும் கல்முனை மாநகர சபைகள் உட்பட 16 உள்ளூராட்சிமன்றங்களில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக, அக்கட்சியின் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி நகர சபை தவிர்ந்த மட்டக்களப்பு மாநகர சபை உட்பட 11 உள்ளூராட்சிமன்றங்களுக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.



கிழக்கு மாகாணத்தில் ஏனைய சில உள்ளூராட்சிமன்றங்களுக்கும் இன்று (14) கட்டுப்பணம் செலுத்தவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்த கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன், கட்சியின் பொருளாளர் ஆறுமுகம் தேவராஜன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலரும் பங்கேற்றனர்.

## அஷ்ரப் நகரில் நடமாடும் சேவை



**சாய்ந்தமருது விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் ஒலுவில் 01 அஷ்ரப் நகரில் 'மக்களை நோக்கி' எனும் தொனிப்பொருளின் கீழ் வெளிக்களப் பயணம் மற்றும் நடமாடும் சேவையொன்று நடத்தப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபிர் தலைமையில் அஷ்ரப் நகர் பெரிய ஜும்மா பள்ளிவாசல் வாளாகத்தில் நேற்று (12) முன்தினம் இச்சேவை நடைபெற்றது. இதில் பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டன.

இதேவேளை, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்படும் சமுர்த்திப் பயனாளிகளுக்கான கொடுப்பனவை, பயனாளிகளின் காலடிக்குச் சென்று வழங்கப்பட்டது. இதில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், வெளிக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஆதிவாசி குடும்பங்களுக்கு பொங்கல் பொருட்கள் வழங்கல்

**பாசிக்குடா நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேசத்தில் வசித்து வரும் ஆதிவாசிக் குடும்பங்களுக்கு தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு பொங்கல் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மத வழிபாட்டுடன் நேற்று முன்தினம் (12) இதற்கான நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு சமூக சேவையாளர் வே.பிரபாகரனிடம் ஆதிவாசிகளின் தலைவர் ந.வேலாயுதம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் குஞ்சன்கல்குளம் மற்றும் இரண்டாம் கட்டைக் கிராமங்களில் வசித்து வரும் சுமார் 120 குடும்பங்களுக்கே பொங்கல் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

லண்டனில் வசிக்கும் நல்லுள்ளம் கொண்டவரான மார்க்கண்டு நேசன் குடும்பத்தினர் இதற்கான நிதியுதவியை வழங்கியிருந்தனர்.

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு இம்மனிதநேய உதவி வழங்கி வைக்கப்பட்டது.

இவ்வுதவியை வழங்கிய நன்கொடையாளர்களுக்கு ஆதிவாசிகள் சமூகத்தினர் நன்றி தெரிவித்தனர்.

## திருக்கோவிலில் பொங்கல் விழா

**காரைதீவு குறூப் நிருபர்**



அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலகப் பொங்கல் விழா நேற்று (13) அப்பிரதேச செயலக வளாகத்தில் மிகக் கோலாகலமாக நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இத் தைப்பொங்கல் விழாவை சிறப்பிக்கும் முகமாக 50 பொங்கல் பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே இப்பொங்கல் பொதிகள் மேல் மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீட கல்வி சமூக பண்பாட்டு அறப்பணி மன்றத்தினுடைய அனுசரணையுடன் வழங்கப்பட்டன.

இதன்போது, அக்கரைப்பற்று நர்த்தனா கலை கலா மன்றத்தினரின் கலை நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்றன.

## வாகரை ஊரியன்கட்டு பாடசாலையில் இராணுவத்தினரால் சிரமதானம்



**பாசிக்குடா நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா கல்வி வலயத்திலுள்ள வாகரை ஊரியன்கட்டு பாடசாலையின் விளையாட்டு மைதானத்தை புனரமைக்கும் நோக்கில் இராணுவத்தினர் சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பாடசாலையின் விளையாட்டு மைதானமானது நீண்டகாலமாக காடு மண்டி புற்கள் படர்ந்து காணப்பட்டதினால், மாணவர்களின் பாட நேர விளையாட்டுகளுக்காகக் கூட இம்மைதானத்தை பயன்படுத்த முடியாத சூழ்நிலை காணப்பட்டது.

இதனைக் கவனத்தில் கொண்ட மேற்படி பாடசாலையின் அதிபர் யோ.மங்களதர்சன், வாகரை பிரதேசத்தின் 233ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் வசந்த கேவகேயிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து, தற்போது இராணுவத்தினர் இச்சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## நீதிமன்ற நடவடிக்கையின் போது பீடியை வழங்க முற்பட்டவருக்கு சிறை

**பாலமுனை தினகரன், ஒலுவில் விசேட, காரைதீவு குறூப் நிருபர்கள்**

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (12) நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, இடையூறு விளைவிக்கும் வகையில் ஒரு கட்டு பீடியை வழங்க முற்பட்ட ஒருவருக்கு 3 மாதகால கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற சிறைக்கூடத்திலிருந்த ஒருவருக்கு மற்றுமொரு நபர் புகையிலை கலந்த பீடியை வழங்குவதற்கு முற்பட்டுள்ளார்.

இதன்போது, மேற்படி நபர் உடனடியாகக் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவர் மீது 1,500 ரூபா அபராதம் நீதவானினால் விதிக்கப்பட்டதுடன், 3 மாத கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## திருகோணமலையில் மின்கம்பத்துடன் வாகனம் மோதியதில் இருவர் காயம்

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை கண்டி பிரதான வீதியில் மின்கம்பமொன்றுடன் திருகோணமலை மாநகர சபைக்குச் சொந்தமான கெப் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில், அவ்வாகனச் சாரதி உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி வீதியூடாக நேற்று முன்தினம் (12) பயணித்த இவ்வாகனம், வேகக் கட்டுப்பாட்டை இழந்து பிரதான மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

கிழக்கு மாகாண சபையிலிருந்து திருவண்ணாமலை மாநகர சபைக்கு பயணித்துக் கொண்டிருந்த போது, வாகனத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இவ்விபத்து இடம்பெற்றிருக்கலாமென, பொலிஸார் தெரிவித்தனர்.



இவ்விபத்தினால் இலங்கை மின்சார சபைக்கு பல இலட்சம் ரூபாய் செலவு ஏற்பட்டுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் திருகோணமலை மின் அத்தியட்சகர் குமாரசுவாமி தெரிவித்தார். இவ்விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## கந்தளாயில் பங்கஸ் நோயினால் வேளாண்மைச் செய்கை பாதிப்பு

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மைச் செய்கையில் பங்கஸ் நோய் பரவி வருவதாக, நேற்று (13) விவசாயிகள் தெரிவித்தனர்.

கந்தளாய் வான்எல, அக்போகம, முள்ளிப்பொத்தானை, தம்பலகாமம், அயிலியடி ஆகிய பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மைச் செய்கையிலேயே இந்நோய்த் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது. இந்நிலையில், இப்பங்கஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறுபட்ட கிருமிநாசினிகளைத் தெளித்தும் பயனின்றிக் காணப்படுவதாகவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்தமுறை பசளையை அதிக விலைக்கு வாங்கி வேளாண்மைச் செய்கையை மேற்கொண்டபோதிலும், வெள்ளத்தினால் பாதிப்பை எதிர்நோக்கியதாகத் தெரிவித்த விவசாயிகள், இம்முறை பங்கஸ் நோய்த் தாக்கத்தினால் தாம் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இவ்வேளாண்மைச் செய்கையில் இரவு, பகலாக பாடுபட்டும் பிரயோசனமின்றிக் காணப்படுவதாகவும், கவலையுடன் விவசாயிகள் தெரிவித்தனர்.

### கிழக்கு மாகாண

## கல்விப் பணிப்பாளருடன் திங்கள் தோறும் மக்கள் சந்திப்புக்கு ஏற்பாடு

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தில் திங்கட்கிழமை தோறும் பொதுமக்கள் தன்னைச் சந்திக்க முடியுமென, அம்மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஏ.கனகசூரியம் தெரிவித்தார்.

இது தொடர்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்றுநிரூபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இவ்விடயம் தொடர்பாக சகல அதிபர்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தூர இடங்களிலிருந்து கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு வருகை தரும் பொதுமக்கள், சில சந்தர்ப்பங்களில் தன்னைச் சந்திக்க முடியாமல் போகக்கூடும். ஆகவே, அவர்கள் வீணாக அலைக்கழிந்து திரும்பிச் செல்வதை தடுக்கும் முகமாகவே, பொதுமக்கள் தன்னைச் சந்திப்பதற்காக திங்கட்கிழமை ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## கஞ்சாவுடன் கைதான இருவருக்கு விளக்கமறியல்

**பாலமுனை தினகரன் நிருபர்**

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இச்சந்தேக நபர்கள் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக திருக்கோவில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, அப்பிரதேசத்தில் வைத்து இவர்களைக் கைது செய்ததுடன், அவர்களிடமிருந்து கஞ்சாவையும் பொலிஸார் கைப்பற்றினர்.

ஒரு சந்தேக நபரிடமிருந்து 2,000 மில்லி கிராம் கஞ்சாவையும் மற்றைய சந்தேக நபரிடமிருந்து 1,700 மில்லி கிராம் கஞ்சாவையும் பொலிஸார் கைப்பற்றினர்.

## மட்டக்களப்பில் 'தை விழா-2023'

**கல்லடி குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட பாண்பாட்டலுவலகம் நடத்தும் தை விழா எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு பொது நூலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட கலாசார இணைப்பாளர் த.மலர்ச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள இத் தை விழாவில், மட்டக்களப்பு மாநாகர ஆணையாளர் நா.மதிவண்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

உழவர் திருநாளாம் இத் தை விழாவில் ஏர்ப்பாடல், 'உள்ளூர் நெல்லும் பட்டியும்' எனும் தலைப்பில் கலந்துரையாடல் உள்ளிட்ட பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

## கஞ்சா செடி வளர்த்தவருக்கு அபராதம்

**தோப்பூர் குறூப் நிருபர்**

கஞ்சா செடியை வளர்த்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு 5,000 ரூபா அபராதம் விதித்து மூதூர் நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சோமபுர பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கே மேற்படி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இக்கஞ்சா செடி வளர்ப்புத் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது, மூன்று அடி உயரத்தைக் கொண்ட கஞ்சா செடியை மேற்படி நபர் வளர்த்து வைத்திருந்தமை தொடர்பாக பொலிஸாருக்குத் தெரியவந்தது.

இதனை அடுத்து, மேற்படி நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் (12) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

# கிழக்கின் குரல்



## மாணவர்களுக்காக கல்முனை பிராந்திய போக்குவரத்துச் சபையால் பஸ் சேவை

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**



கல்முனைப் பிராந்தியத்தில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்களின் நன்மை கருதி கல்முனை பிராந்திய போக்குவரத்து சபையினால் விசேட பஸ் சேவைகள் தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. களுவாஞ்சிக்குடி, அட்டப்பள்ளம், அம்பாறை ஆகிய பிரதேசங்களுக்கான பஸ் சேவைகளே இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக, கல்முனைப் பிராந்திய பஸ் வண்டி நேரக் கணிப்பாளர் கருணாநிதி தெரிவித்தார்.

மாணவர்கள் உரிய வேளைக்கு பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பும் வகையில் இப்பஸ் சேவைகளின் மூலம் அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் 134,000 ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை ஒரு இலட்சத்து 34 ஆயிரம் ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் தெரிவித்தது.

இம்மாவட்டத்தின் 13 பிரதேச செயலகப் பிரிவுகளில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. வவுணதீவு, கிரான், வெல்லாவெளி, கொக்கொட்டிச்சோலை, செங்கலடி, வாகரை போன்ற பிரதேசங்களில் அதிகளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கையினால் சிறந்த விளைச்சல் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

## மண்முனை மேற்கில் 523 பேருக்கு சத்துமா

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைந்த போஷாக்கு மட்டத்தைக் கொண்டவர்களின் ஊட்டச்சத்தை மேம்படுத்தும் வகையில் மண்முனை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் 523 பேருக்கு சத்துமா நேற்று முன்தினம் (12) வழங்கி வைக்கப்பட்டது.

கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் நிறை குறைந்த சிறுவர்களுக்கு இச்சத்துமா வழங்கப்பட்டதுடன், இதன்போது போஷாக்குடைய உணவை உட்கொள்வதின் அவசியம் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

கிராமிய அபிவிருத்தித் திட்டமிடல் அமைப்பினால் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே இச்சத்துமா வழங்கப்பட்டது.

## திருகோணமலையில் சக்திப்பொங்கல் விழா



**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் மாபெரும் சக்திப் பொங்கல் விழா இன்று (14) சனிக்கிழமை காலை 9 மணிக்கு, சுவிட்ஸர்லாந்து பேர்ன் மாவட்டத்தின் மேல் மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீட கல்விச் சமூக நலன் பண்பாட்டு அறப்பணி மையத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளது.

திருகோணமலை செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலத்தில், மேற்படி அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளரும் ஆசிரியருமான சக்தி சரவணபவ ஆனந்தம் திருச்செந்தூரன் தலைமையில் இப்பொங்கல் விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பொன்னம்பலம் தனேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். இதன்போது, வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள 50 குடும்பங்களுக்கும் 13 அறப் பணியாளர்களுக்கும் பொங்கல் பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்படவுள்ளன.

## ஆலையடிவேம்பில் 100 பேருக்கு பொங்கல் பொருட்கள் வழங்கல்

**வாச்சிக்குடா விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் வசித்து வரும் 100 குடும்பங்களுக்கு தலா 3,500 ரூபா பெறுமதியான பொங்கல் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே ஆலையடிவேம்பு பிரதேச இந்துமா மன்றத்தினால் இப்பொங்கல் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அகில இலங்கை இந்துமா மன்றத்தின் அனுசரணையுடன் நோர்வே நாட்டில் வாழும் நலன் விரும்பி ஒருவரின் நிதிப் பங்களிப்புடன் இப்பொங்கல் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.



## மண்முனை மேற்கில் பற்சிகிச்சை நிலையம்



**மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான் குடி தினகரன், மட்டக்களப்பு விசேட நிருபர்கள்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயத்தில் பற்சிகிச்சை நிலையமொன்று நேற்று முன்தினம் (12) திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி குணசிங்கம் சுகுணன், பிராந்திய பற்சத்திர சிகிச்சை நிபுணர் கே.முரளிதரன் ஆகியோரினால் இந்நிலையத்தின் சேவைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மண்முனை மேற்கு பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்களின் பற்சுகாதாரத்தை பரிசோதனை செய்து தேவையானவர்களுக்கு சிகிச்சையளிக்கும் வேலைத்திட்டம் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனை அதிகாரிகளினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசத்தில் பற்சிகிச்சை பெற முடியாதுள்ள மக்களின் பற்சுகாதாரத்தை பரிசோதனை செய்து துரிதமாக சிகிச்சை வழங்குவதற்கு நவீன வசதிகளுடனான நடமாடும் பற்சிகிச்சைக் கூட சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, வைத்தியக் கலாநிதி கு.சுகுணன் தெரிவித்தார்.

## பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை

**மூதூர் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் பொலித்தீன் பாவனையால் ஏற்படும் பாடசாலைச் சுற்றுச்சூழல் பாதிப்பைக் கட்டுப்படுத்த அவ்வப் பாடசாலைகளின் நிர்வாகங்களினால் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக, பாடசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

பாடசாலைச் சூழலில் அதிகளவில் பொலித்தீன்கள், பிளாஸ்டிக் பொருட்கள் கழிவுகளாக ஒன்றுசேர்வதாகவும், பாடசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகையால், இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், பாடசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, உற்சவங்கள், அலங்கார வேலைகளுக்காக பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையை தவிர்த்துக் கொள்ளுமாறும், கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

## திருமலையில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் எயிட் நிறுவனம் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கல்வி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று (13) வழங்கப்பட்டன.

தம்பலகாமம் கல்மெடியாவ சிங்கள வித்தியாலயம், முள்ளிப்பொத்தானை புஹாரி மத்திய கல்லூரி, பாத்திமா பாலிகா மகா வித்தியாலயம், பராசக்தி ஆரம்பப் பிரிவு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கே இக்கற்றல் உபகரணங்கள் பாதணிகள், தளபாடங்கள் போன்றன வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன், மேற்படி பாடசாலைகளில் புனரமைக்கப்பட்ட வகுப்பறை கட்டடங்களும் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டன.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களை இனங்கண்டு மேற்படி உதவிகளை வழங்கும் திட்டத்தை முஸ்லிம் எயிட் நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது

## சவளக்கடையில் முப்பெரும் விழா



**சவளக்கடை குறூப் நிருபர்**

சவளக்கடை வீரத்திடல் அல்ஹிதாயா மகா வித்தியாலத்தின் முப்பெரும் விழா அப்பாடசாலையின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது, மருதம் மலர் வெளியீடும் இடம்பெற்றது. அத்துடன், கபொ.த. உயர்தர தின விழாவும் நடைபெற்றதுடன், கடந்த வருடங்களில் சாதனை படைத்து பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்கள் அதிதிகளினால் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை, நாகமரமொன்றை பாடசாலை வளாகத்தில் நடுவதற்காக பாடசாலை அதிபரிடம் அப்பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் டீ.எம்.மௌசூன் கையளித்தார்.

## காரைதீவில் கல்வியில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிப்பு



**காரைதீவு குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவுப் பிரதேசத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த, உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அந்த வகையில் 29 மாணவர்களுக்கு பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. வைத்தியத் துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட 4 மாணவிகளுக்கும் பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட ஒரு மாணவிக்கும் மேலதிகமாக AUSKAR விசேட நினைவுச்சின்னங்களும் வழங்கப்பட்டன.

அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியத்தின் கல்வித் திட்டங்களில் ஒன்றாக இம்மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

## அகத்தியர் ஆலயத்தில் ஐவருக்கு கௌரவம்



தமிழில் முதல் இலக்கண நூலான அகத்தியம் எனும் நூலை உலகுக்கு அளித்து தமிழுக்கும் சைவத்துக்கும் அளப்பரிய தொண்டாற்றிய அகத்திய மாமுனிவரின் ஜனன தினத்தையொட்டி, கங்குவேலி அகத்தியர் ஆலயத்தில் பிரமுகர்கள் ஐந்து பேர் கௌரவிக்கப்பட்டனர். சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றி வரும் இப்பிரமுகர்களின் சேவையை பாராட்டி, சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குருஶ்ரீ சிவசங்கர் ஜியின் ஏற்பாட்டில் இக்கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அகத்தியர் தேவஸ்தானத்தின் தலைவரும் ஓய்வுநிலை அதிபருமான வே.தவராஜா, உலகப் புகழ் பெற்ற நாதஸ்வர வித்துவான் ஈழநல்லூர் ஸ்ரீ பாலகுமாரன், ஊடகவியலாளர் வி.ரி.சகாதேவராஜா, உலகப் புகழ் பெற்ற தவில் சக்கரவர்த்தி ஸ்ரீ செந்தில், அகத்தியர் ஸ்தாபன மூத்த சேவையாளர் அதிபர் கே.கணேசலிங்கம் ஆகியோரே பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். சித்தர்கள் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத் தலைவர் மனோகரன் ஆகியோர் இவர்களுக்கு கௌரவமளித்தனர்.

படங்கள்: காரைதீவு குறூப் நிருபர்

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2023 ஜனவரி
14 சனிக்கிழமை



# பூநகரி கௌதாரி முனை காற்றாலை மின்உற்பத்தி திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்திப் பணிகள்

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி – பூநகரி கௌதாரி முனை பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதேநேரம் இருநூறு கோடி ரூபா செலவில் வீதி புனரமைப்பு உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி கௌதாரி முனை பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி செயற்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் கருத்தரங்கு ஒன்று நேற்று கௌதாரி முனை கிராம அலுவலர் பிரிவில் நடைபெற்றது.



நிலைபெறு தகு வலுசக்தி அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் சேபால மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய வகையில் இத் திட்டம் அமையும் என தெரிவித்தார். இத்திட்டத்தின் மூலம் 240 மெகாவொட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். காற்றாலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன் கௌதாரி முனை மண்ணித்தலை பிரதான வீதி மற்றும் உபவீதி உள்ளிட்ட 25 கிலோமீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்படும். அத்தோடு பாடசாலைக்கு தேவையான அடிப்படை வசதிகள் மீனவர்களுக்கான இறங்கு துறை, முன்பள்ளிகளுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், மீனவர்களுக்கான வாழ்வாதாரம் என பல்வேறு செயற்திட்டங்கள் சுமார் 200 கோடி ரூபா செலவில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்நிகழ்வில் பூநகரி பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் துறை சார்ந்த பதவி நிலை உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# தமிழக கடற்றொழிலாளர்களுக்கு எதிராக யாழில் போராட்டம்



**யாழ்.விசேட நிருபர்**

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை கண்டித்தும், அவற்றை உடனடியாக தடுத்து நிறுத்த வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்தில் நேற்று மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணம் குருநகர் கடற்றொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் குருநகரில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை இப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு, அங்கிருந்து பேரணியாகச் சென்று மகஜர்களை கையளித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திலும் அதனைத் தொடர்ந்து கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடம் மகஜர்களை கையளித்தனர்.

# இ.போ. சபை பஸ் வேக கட்டுப்பாட்டை இழந்து விபத்து



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்து இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று வேக கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. யாழ்ப்பாணம் பருத்தித்துறை 750 ஆம் இலக்க வழித்தட பஸ் ஒன்றே பருத்தித்துறை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த வேளை, நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை சிறுப்பிட்டி பகுதியில் வேக கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான பஸ்சும், வாகன திருத்தகத்தினுள் நின்ற வாகனங்களும் சேதமடைந்துள்ளன.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# த.வி. கூட்டணி தனித்து போட்டியிட்டாலும் அனைவருடனும் இணைந்தே செயற்படும்

**ஓமந்தை விசேட நிருபர்**

தமிழர் விடுதலைக்கூட்டணி ஏனைய கட்சிகளின் கூட்டணியின்றி தனித்து போட்டியிட்டாலும் அனைவருடனும் இணைந்தே செயற்படுவோம் என தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது.

அக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

தமிழர் விடுதலைக்கூட்டணி, தாயகப்பிரதேசத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் தனித்து போட்டியிடவுள்ளது. எம்மோடு இணைந்து செயற்பட்ட அனைவரும் வர வேண்டும். அதற்காக அனைவரையும் வரவேற்கின்றோம்.

பொருளாதார நெருக்கடியான காலத்தில் உள்ளூராட்சி மன்றங்களை ஒருமித்த கருத்தோடு சரியான



முறையில் கொண்டு செல்ல வேண்டிய தேவையுள்ளது. எனவே அனைவரையும் வரவேற்கின்றோம். பல தசாப்தங்களுக்கு பின்னர் ஜனநாயக முறையிலான உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவுள்ளது. மக்கள் இந்த கடினமான காலத்திலும் கூட பங்குபெறவேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்கள் பல கட்சிகளை கொண்டு அமைந்தாலும் கூட மக்களுக்கான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். இது மாகாணசபை மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் அல்ல. உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி தனியாக போட்டியிடப்போகின்றது.

பல சபைகளில் நாங்களே ஆட்சி அமைத்தாலும் கூட அனைவரையும் உள்வாங்கி ஒருமித்து செயற்படுவதே எமது நோக்கமாக இருக்கின்றது. தமிழ் கட்சிகள் ஒன்றாக போட்டியிடப்போகின்றது. தனித்தனியாக போட்டியிடப்போகின்றது எல்லாம் அரசியலுக்காக ஒவ்வொரு கட்சிகளும் தமது முடிவுகளை எடுக்கின்றனர்.

நாம் மற்ற கட்சிகளின் முடிவுகளை பற்றி சிந்திக்கவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணிக்கென்று தெளிவான கருத்து இருக்கின்றது.

தெளிவான கொள்கை இருக்கின்றது. நாம் பல வருடங்களின் பின்னர் கட்சியை மீள் கட்டமைத்து முன்சென்றுகொண்டிருக்கின்றோம். எனவே ஏனைய கட்சிகளின் கூட்டணி இணைப்பின்றி நாம் தனித்து போட்டியிடுவோம். ஆனால் அனைவருடனும் இணைந்து செயற்படுவோம்.

தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என்பதை தெளிவாக கூறி வந்திருக்கின்றோம். வட்டுக்கோட்டைபிரகடனத்தைஉருவாக்கிய கட்சி தமிழர் விடுதலைக்கூட்டணி. சுதந்திர தினத்திற்கு முன் தீர்வை காணுவேன் என ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.

அதற்கு இன்னும் சில வாரங்களே உள்ளன.

தமிழ் கட்சிகளை அழைத்தபோது தமிழர் விடுதலைக்கூட்டணியை அழைக்கவில்லை. பாராளுமன்றத்தில் பிரதிநிதிப்படுத்தும் கட்சிகளை மாத்திரமே அழைப்பதாக தெரிவித்திருந்தனர். ஆனால் தமிழர் பிரச்சினை அவ்வாறான விடயம் அல்ல.

எம்மிடம் தீர்வு திட்டமும் உள்ளது. அது என்ன என்பதனை சரியான வேளையில் மக்களுக்கு தெரிவிப்போம். அத்துடன் இலங்கையிலுள்ள அனைத்து கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தவும் தயாராக உள்ளோம் என அவர் தெரிவித்தார்.

# வடக்கு ஆளுநர் மக்களின் தேவைகளை அறிந்து அதற்கேற்ப செயற்படக்கூடியவர்

## அமைச்சர் ரொஷான் ரணசிங்க

**கோப்பாய் குறூப் நிருபர்**



வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மக்களின் தேவைகளை அறிந்து விரைந்து செயற்படக்கூடியவர் என விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க புகழாரம் சூட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ். ஸ்ரீலங்கா தொழிற் பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு ஆளுநர் வடக்கு மக்களின் உணர்வுகளையும் தேவைகளையும் நன்கு அறிந்து செயற்படுகிறார்.

வடக்கிலுள்ள இளைஞர் யுவதிகளின் எதிர்கால வழிகாட்டலுக்காக பல்வேறு துறைச் சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார். எமது அமைச்சின் கீழ் தொழில் பயிற்சி நிலையங்களின் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கு பல்வேறு திட்டங்களை வகுத்து செயற்படுத்தி வருகிறார்.

வட மாகாணத்திலிருக்கும் இளைஞர் யுவதிகளிடம் பல்வேறு திறமைகள் காணப்படுகின்றன. அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற சலுகைகளை பயன்படுத்தி தமது திறமைகளை அவர் மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

யாழ்.மாவட்டத்திலிருந்து தர்ஷினி தென்னிலங்கையில் சுசந்திக்கா இருவரும் பல்வேறு தடைகள் வந்த போதும் தமது அயராத முயற்சியினால் சாதனை படைத்தவர்கள்.

அவர்களைப் போன்று வடக்கு இளைஞர் யுவதிகளும் தமக்கு கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரிவர பயன்படுத்தி தேசியரீதியிலும் சர்வதேசரீதியிலும் உயர்வு பெற வேண்டும். ஆகவே அமைச்சர் என்ற வகையில் வட மாகாண இளைஞர் யுவதிகளுக்காக வட மாகாண ஆளுநர் முன்னெடுக்கும் அனைத்து செயற்பாடுகளுக்கும் எமது பங்களிப்புக்களை வழங்குவேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# த.வி.கூட்டணிக்குள் தென்னிலங்கை கட்சி உறுப்பினர்கள் இணைவு

## மகளிர் பேரவை தலைவர் குற்றச்சாட்டு

**யாழ்.விசேட நிருபர்**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தன்னிச்சையாக மத்திய குழுவின் அனுமதியின்றி கடந்த காலத்தில் தென்னிலங்கை கட்சிகளில் போட்டியிட்டு தோல்வியடைந்த இருவரை கட்சியில் இணைக்க முயற்சிக்கின்றார் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் மகளிர் பேரவை தலைவர் சூரியமூர்த்தி சூரியபிரதீபா வாசவன் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் இலங்கையில் இல்லாத சமயத்தில் தலைவருக்கோ அல்லது கட்சியின் பெரும்பாலான மத்திய குழு உறுப்பினர்களுக்கோ அழைப்பு விடுக்காது இருவரை இணைப்பதற்காக வவுனியாவில் சட்டவிரோதமாக மத்திய குழுக்கூட்டத்தை நடாத்தியுள்ளார். இதற்கு எதிராக நாம் நடவடிக்கை எடுப்போம். எனது தந்தையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை முன்னாள் நகர பிதாவுமான சூரியமூர்த்தி 2004ஆம் ஆண்டு சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்தேன்.

ஆனாலும் தமிழர் விடுதலைக் கூட்டணியை மறுசீரமைப்பு செய்வதற்காக 2022 கட்சியின் பொதுக்குழுவின் அங்கீகாரத்துடன் மகளிர் பேரவை தலைவராக தெரிவானேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரிக்கு கடும் எதிர்ப்பு கட்சிக்குள் ஏற்பட்ட போது சிரேஷ்ட தலைவர், எனது தந்தையின் குடும்ப நண்பர் என்ற அடிப்படையில், அவருக்கு ஆதரவாக செயற்பட்டேன். ஆனால் கடந்தகாலத்தில் தென்னிலங்கை கட்சிகளில் போட்டியிட்டு தோல்வியடைந்த இருவரிடம் தற்போது கட்சியை ஒப்படைப்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் முயற்சிக்கிறார்.

அவர்கள் இருவரும் கட்சிக்குள் வருவது எமக்கு பிரச்சினையல்ல. அதனை சட்டரீதியாக மேற்கொள்ள வேண்டும். இருவரும் தென்னிலங்கை கட்சிகளிலிருந்து விலகுவதாக பகிரங்கமாக அறிவித்து பகிரங்கமாக எமது கட்சியில் உறுப்பினராக இணைந்துகொள்ள முடியும். சட்டவிரோதமான நடவடிக்கைகளை செய்து கட்சியை கபளீகரம் செய்யமுடியாது. இதற்கு எதிராக நடவடிக்கை எடுப்போம். இது தொடர்பாக நான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகத்திடம் கேள்வியெழுப்பிய போது, கட்சியின் கூட்டங்களில் என்னை பங்கேற்க வேண்டாம் என்றார். தமிழர் அரசியலில் எமது கட்சிக்கும் கட்சியின் சின்னத்திற்கும் தற்போது தேவை இருக்கும்போது அதனை கருத்திற்கொள்ளாமல் செயற்படுவதை ஏற்கமுடியாது என்றார்.

# யாழ். பல்கலையில் மலையக தியாகிகள் நினைவேந்தல்





**யாழ்.விசேட நிருபர்**

மலையகத் தமிழர்களுக்கான தொழிற்சார் மற்றும் இதர உரிமைகளை வென்றெடுப்பதற்கான உரிமை போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளின் நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் மற்றும் மலையக மாணவர் ஒன்றியம் ஆகியவை இணைந்து நேற்றைய தினம் வியாழக்கிழமை நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, மலையக வாழ் மக்களின் அறப்போராட்டங்களில் உயிர் நீத்த தியாகிகளின் நினைவுருவ படத்திற்கு ஈகை சுடரேற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தி, அகவணக்கமும் செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்,கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர், மலையக மாணவர் ஒன்றியத்தின், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

1930ற்கு பிற்பட்ட காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க அரசியல் உரிமைப் போராட்டங்களில் பங்குபற்றி உயிர் நீத்த அனைத்து தோட்டத் தொழிலாளர்கள் "மலையக தியாகிகள்" என அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

# போதை மாத்திரைகளுடன் இருவர் கைது

**ஓமந்தை விசேட நிருபர்**

வவுனியாவில் போதை மாத்திரைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.நேற்றுமுன்தினம் (12) பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா மதவாச்சி பகுதியில்



விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டசோதனைநடவடிக்கையின் போது மதவாச்சி பகுதியில் 100 போதை மாத்திரைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும் போதை மாத்திரைகளுடன் மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.




# டிக்கோயா வைத்தியசாலைக்கு முன்பாக சுகாதார ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



ஹற்றன் சுழற்சி நிருபர்

டிக்கோயா வைத்தியசாலையில் சேவையாற்றும் சுகாதார ஊழியர்களில், அகில இலங்கை தாதியர் சங்கத்தின் உறுப்பினர்கள் வைத்தியசாலைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் மதியம் போராட்டத்தில் ஈடுபட்டனர். பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலைக்கு சிகிச்சைபெறுவதற்கு வந்திருந்த நோயாளர்களும், தாதியர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இதன்போது, வங்கிக் கடன் வட்டி சதவீதத்தை குறை", " சம்பாதிக்கும் போது அறவிப்படும் வரியிலிருந்து சுகாதாரத்துறையை நீக்கு","மின்சாரக் கட்டணத்தை குறை", "தாதியர் பதவி உயர்வு முரண்பாடுகளை களையவும்", "நோயாளிகளுக்கு போதிய மருந்து வழங்கு", "மருத்துவ உபகரணங்களை வழங்கு", "உணவு மற்றும் பரிசோதனைகளை வழங்கவும்", "பணிச்சுமையை குறைக்கவும்", என்றும் கோஷமிட்டனர்.



இரத்தினபுரி தமிழ் ஆரம்ப வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் (12) சந்தை இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.

# சமூக மாற்றத்துக்கான பயணத்தை ஆரம்பிக்கவே தேர்தலில் போட்டி

## சமூக செயற்பாட்டாளர் ராமன் செந்தூரன்



ஹற்றன் சுழற்சி நிருபர்

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கொட்டகலை பிரதேச சபைக்கு போட்டியிடுவதற்காக சுயேட்சைக் குழுவொன்று நேற்று கட்டுப்பணம் செலுத்தியது.

சமூக செயற்பாட்டாளரும், அரசியல் ஆய்வாளருமான ராமன் செந்தூரன் தலைமையிலான குழுவினரே இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தினர். நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஏனைய சபைகளிலும் தமது அணி சுயேட்சையாக களமிறங்கும் எனவும், அதற்கான கட்டுப்பணம் ஒரிரு நாட்களுக்குள் செலுத்தப்படும் எனவும் ராமன் செந்தூரன் கூறினார்.

மலையக அரசியல் வாதிகள், எமது மக்களை திட்டமிட்ட அடிப்படையில் ஏமாற்றிவருகின்றனர். இளைஞர்களையும் சந்தர்ப்பத்துக்காக பயன்படுத்திவருகின்றனர். எனவே, இந்நிலைமை மாற வேண்டும். நாம் மாற்றியமைப்போம். சமூக மாற்றத்துக்கான பயணத்தை வெற்றிகரமாக ஆரம்பிக்கவே நாம் தேர்தலில் போட்டியிடுகின்றோம். மக்கள் எமக்கு ஆசிவழங்குவார்கள் எனவும் செந்தூரன் குறிப்பிட்டார்.

# பொங்கல் தினத்தன்று மதுபான விற்பனை நிலையங்களை மூடுமாறு கோரிக்கை

## கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார்

எதிர்வரும் பொங்கல் தினத்தை முன்னிட்டு 15ம்திகதி ஞாயிற்றுக்கிழமை நுவரெலியா மாவட்டத்தில் சகல மதுபான விற்பனை நிலையங்களை மூடுமாறு மதுவரி திணைக்கள ஆணையாளருக்கு கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். இந்துக்களின் புனித தினமான பொங்கல் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 15ம் திகதி நுவரலியா மாவட்டத்தில் சகல மதுபான விற்பனை நிலையங்களையும்,

அத்துடன் பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை மற்றும் ரிதிமாலியந்த பகுதிகளை தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இருக்கும் சகல மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்துக்களின் புனித தினமான தைப்பொங்கல் தினத்தன்று மக்களை கடவுள் இறை வழிபாடுகளில் அதிகம் ஈடுபடுவதற்கான ஒரு முயற்சியாகவே தான் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# சப்ரகமுவ மகாசமன் தேவாலயத்தில் திருட்டு விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணையில்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

இரத்தினபுரியில் அமைந்துள்ள சப்ரகமுவ மகா சமன் தேவாலயத்தில் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் வைக்கப்பட்டிருந்த உண்டியல்கள் திருடப்பட்டுள்ளன.

விசேட பொலிஸ் காவலரன் விசேட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சீ.சீ.டிவி பாதுகாப்பு கட்டமைப்பு ஆகிய பாதுகாப்பு நடவடிக்கைளுக்கும் மத்தியில் சமன் தேவாலய தியவடன நிலமேயின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் ஒரு பகுதியில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்த அறையின் இரும்பு சட்டங்களும் உடைக்கப்பட்டு நாணயப்பொதிகளில் பாதுகாக்கப்பட்ட பணம் திருடப்பட்டுள்ளமை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இதே வேளை தேவாலயத்தின் பொலிஸ் பாதுகாப்பு அரணில் பாதுகாப்புக்கு இருக்க வேண்டிய அதிகாரிககள் சம்பவ தினத்தன்று வேறு இடங்களுக்கு மாற்றீடு செய்துள்ளமை குறித்தும் இரத்தினபுரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. இச்சம்பவம் குறித்து இருவேறாக விசேட அணிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தங்க முலாம் பூசப்பட்ட சட்டத்தை விற்க முயற்சித்த இருவர் கைது

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

புதையல் தோண்டிக் கிடைத்த தங்கக் குற்றி எனக்கூறி தங்க முலாம் பூசப்பட்ட சட்டமொன்றை ஏமாற்றி விற்க முயன்ற இரண்டு சந்தேகநபர்களை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அமுஹேன்யான பிரதேசத்தில் இவர்கள் இதனை வைத்திருப்பதாக கிடைத்த தகவலையடுத்து வியாபாரிகள் போன்று வேடம் தரித்த பூகொட விசேட அதிரடி படை முகாம் அதிகாரிகள் இவர்கள் இருவரையும் கைதுசெய்ததுடன் போலி இரும்பு குற்றியையும் மீட்டுள்ளனர். சந்தேக நபர்கள் அமுஹேன்கந்த மற்றும் ஜேன்யார் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

புதையல் ஒன்றிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட தங்க குற்றி எனவும் இதனை 20கோடி ரூபாவுக்கு விற்பனை செய்வதாகவும் சந்தேகநபர்கள் அதிரடிப்படை அதிகாரிகளுடன் பேரம் பேசியுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை விசாரணைகளுக்குட்படுத்தி இவர்கள் மீது வழக்கு தொடரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மோசடிக்காரர்களிடம் அவதானம்

## பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

சிங்கள தமிழ் புத்தாண்டு பண்டிகை காலத்தில் தமது தேவைகளுக்காக நகரங்களுக்கு வருகின்ற பொதுமக்கள் திருடர்களிடம் கவனமாக இருக்குமாறு பலாங்கொடை பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

பண்டிகை காலத்தில் பொது மக்கள் தமக்குரிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக நகரங்களை நாடி வரும் போது இவர்கள் தமது கைவரிசையை காட்டுவது வழக்கம். இக்காலத்தில் பொதுமக்களை இவர்கள் மீது குறிவைத்திருப்பார்கள். விசேடமாக பொருட்களை வாங்குவதற்காக வைத்திருக்கும் பணம் மற்றும் நகைகளை கவனமாக வைத்திருப்பது அவரவர் பொறுப்பாகும்.

# நுவரெலியா கல்வி வலய பிராந்திய இணைப்பாளர் சேவையிலிருந்து ஓய்வு

தலவாக்கலை குறூப் நிருபர்

நுவரெலியா கல்வி வலயத்தில் ஆங்கில கல்வி வளர்ச்சிக்கு மிக நீண்ட காலம் பங்காற்றிய நுவரெலியா கல்வி வலய பிராந்திய ஆங்கில மொழி மூல தலைமை இணைப்பாளர் கமலா வில்ஷன் தனது 35 வருட கல்விச் சேவையிலிருந்து கடந்த மாதம் 31ஆம் திகதி ஓய்வு பெற்றார்.

அவரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நுவரெலியா கல்வி வலய ஆங்கில ஆசிரியர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நுவரெலியா கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.சாந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வலயக் கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.சாந்தகுமார், வலய பிராந்திய



ஆங்கில மொழி மூல இணைப்பாளர்கள் தம்மிக்கா கோதாபத்திரன, தேசானி சேனாதீர ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இதன்போது வலயக் கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.சாந்தகுமார், வலய பிராந்திய ஆங்கில மொழி மூல இணைப்பாளர்கள் தம்மிக்கா கோதாபத்திரன,தேசானி சேனாதீர ஆகியோரால் கமலா வில்ஷன் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# நவீன உணவுப் பழக்கங்களே தொற்றா நோய்கள் அதிகரிக்க காரணம்

## சமூக நல வைத்திய அதிகாரி சஜீஹா

அக்குறணை குறூப் நிருபர்

நவீன உணவுப் பழக்கங்களே தொற்றா நோய்கள் அதிகரிக்க முக்கிய காரணமாகும் என, பாத்ததும்பறைப் பிரதேச சமூக நல (சதேச) வைத்தியஅதிகாரி எம்.எஸ். எஸ்.சஜீஹா தெரிவித்தார்.

மடவளை சீனியர் சிட்டிஷன் அமைப்பினர் ஒழுங்குசெய்த தாய்மார்களுக்கான போசாக்குணவு பற்றிய செயலமர்வில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் வரை இலங்கை ஆகக் குறைந்த இறப்பு வீதத்தை பதிவு செய்த நாடாகவும், சிறந்த சுகாதார வசதிகளையும், இலவச சுகாதாரம், இலவச கல்வி என்பவற்றைக் கொண்ட நாடாகவும், சிறந்து விளங்கியது.

பாரம்பரிய வைத்தியங்களில் ஒன்றான ஆயுர்வேத வைத்திய கோட்பாடுகளின் படி சமநிலை உணவு என்பது மேற்கத்தேய உணவு வகையீடுகளிலிருந்து வேறுபட்டது.

அதாவது மேற்கத்திய முறையில் புரதம், மாப்பொருள், கனி உப்புக்கள் என்ற வகையில் நிறையுணவு வரையறுக்கப்படுகின்றது. ஆனால் ஆயுர்வேதத்தில் ஆறுவகையான சுவைகளை வைத்தே நிறையுணவு அல்லது சமநிலை உணவு தீர்மானிக்கப்படுகிறது.

செயற்கை சுவையூட்டிகள், செயற்கை வாசனைகள் போன்றனவற்றை உடம்பு ஏற்க மறுக்கும். அதுவே பின்னர் இருதய நோயாகவோ, சிறுநீரக வியாதியாகவோ, தோல் வியாதிகளாகவோ, அல்லது புற்று நோயாவோ ஒரு வடிவில் வரலாம்.

# மின்சாரம் தாக்கி உயிரிழந்த கவரவிலை தோட்ட இளைஞரின் மனைவிக்கு சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் வேலை

## 50 இலட்ச ரூபா நட்டஈடு வழங்கிவைப்பு

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மின்சாரம் தாக்கி உயிரிழந்த சாமிமலை கவரவிலை தோட்டத்தைச் சேர்ந்த நல்லையா சிவகுமார் என்ற 33 வயது இளைஞரின் மரணத்துக்கு ஹொரண பிளாண்டேசன் நிர்வாகத்தின் ஊடாக 50 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. அதற்கான காசோலைகள் வைப்பிலிடப்பட்டு குடும்பத்தாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இறந்தவரின் மனைவிக்கு சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் வேலை வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கவரவிலை தோட்டத்தைச் சேர்ந்த இளைஞர் சிவகுமார் 2022 நவம்பர் மாதம் 24 ஆம் திகதி தோட்டத் தொழிற்சாலையில் வேலை செய்துக்





கொண்டிருக்கும் போது மின்சாரம் தாக்கி மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கிளங்கன் நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் கவரவிலை தோட்டத்துக்கு நேரடியாக விஜயம் செய்து அஞ்சலி செலுத்திய பின்னர், கவரவிலை தோட்ட முகாமையாளர் கமில்ச, ஹொரண பிளாண்டேசன் இயக்குனர் வசந்த குணவர்தன ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

அதன்பயனாக இறந்தவருக்கு 50 இலட்ச ரூபா நட்ட ஈடு வழங்கவும், அதில் அவரது மூன்று பிள்ளைகளான மகன்மார்கள் கிஷோர், மிதுன் ஜனார்த்தன், மகள் சக்தி ஆகியோருக்கு தலா 10 இலட்சம் வீதம் 30 இலட்ச ரூபா, அவரது மனைவி சுஜீவாவுக்கு 20 இலட்ச ரூபாவுடன் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் வேலையும், வீடு அமைக்க காணியும் வழங்க இணக்கம் காணப்பட்டிருந்தது.

அதன்படி அவர்களின் பிறப்புச் சான்றிதழ்கள், வங்கிக் கணக்கு புத்தகங்கள் முதலான ஆவணங்கள் தோட்ட நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

அதன்படி நேற்றுமுன்தினம் காசோலைகளை வைப்பிலிட்டு வங்கிப் புத்தகங்களை தோட்ட முகாமையாளர் கமில்ச குடும்பத்தாரிடம் கையளித்துள்ளார்.

இதுசம்பந்தமாக நேற்று வியாழக்கிழமை தோட்டத்தில் முகாமையாளர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு ஜீ.நகுலேஸ்வரன் நன்றி தெரிவித்தார்.

# நகர்வலம்









ஜனனம் அறக்கட்டளை மற்றும் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் டெக் பந்து (TEQBALL) கூட்டமைப்பும் இணைந்து பாடசாலைகளுக்காக டெக் பந்து (Teqball) உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொ/விவேகானந்தா கல்லூரிக்கு டெக் பந்து(Teqball) உபகரணங்களை வழங்கியது. கலாநிதி. வி. ஜனகன், கல்லூரியின் அதிபர் செல்வி தெ.தேவசியானியிடம் இவற்றை கையளித்தார்.
படங்கள்: மொஹமட் நசார்

## மணிப்பூர் மாணவியருக்கு பாடசாலை, விளையாட்டு உபகரணங்கள்

### ஆளுநர் இல. கணேசன் வழங்கினார்

மணிப்பூரின் தலைநகரமான இம்பால் நகரில் நடைபெற்ற கொடை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட மணிப்பூர் ஆளுநர் இல. கணேசன், மத்திய வெளிவிவகார மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் ராஜ்குமார் ரஞ்சன் சிங்கின் மகளின் மறைவு அஞ்சலி நிகழ்வில் பாடசாலை மாணவியர்களுக்கு உதவி வழங்கப்படுவதை பாராட்டினார்.

அழிந்து போகும் நிலையில் உள்ள ஓர்கிட் செடிகள் உட்பட தாவரவியல் துறையில் குறிப்பிடத்தக்க விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை மேற்கொண்டவரே டயானா ராஜ்குமாரி என்றும் தன் கலாநிதி பட்டத்துக்காக கற்றுக் கொண்டிருக்கும் போதே அவர் காலமானார் என்றும் குறிப்பிட்ட ஆளுநர் இல. கணேசன், இளம் விஞ்ஞானி பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டதையும் நினைவு கூர்ந்தார்.

இங்கு உரையாற்றிய மத்திய இராஜாங்க அமைச்சர், தன் மகள் மறைந்தாலும் அவரது பணியை ஏனைய மாணவர்களும் தொடர வேண்டும் என்று குறிப்பிட்டதோடு பெண் கல்வி மிக முக்கியமானது என்றும் கல்வி மற்றும் அபிவிருத்தித் துறைகளில் பெண்கள் முன்னணி வகித்தல் அவசியம் என்றும் தெரிவித்தார்.

பின்னர் இருவரும் இணைந்து சைக்கிள், புரஜெக்டர், விளையாட்டு மற்றும் கல்வி உபகரணங்களை மாணவியர்களுக்கு பகிர்ந்தளித்தனர். 18 பாடசாலைகளைச் சேர்ந்த 90 மாணவியர்களுக்கு இவை வழங்கப்பட்டன.

## விலக்கிக் கொள்ளப்பட்ட கொவிட் தடுப்பு கொள்கைப் பற்றி குறிப்பிடாது சீன அதிபர் உரை

சீன அதிபர் தன் புத்தாண்டு செய்தியாக மக்களுக்கு ஆற்றிய உரையில் கம்யூனிச கட்சிக் கொள்கைகள், கடந்த ஆண்டு நிகழ்வுகள், ஒரே சீனத்தை வலியுறுத்தியமை போன்ற விடயங்களே இடம்பெற்றிருந்ததாகவும் கடந்த ஆண்டில் தான் இறுக்கமாக பின்பற்றிய கொவிட் கொள்கை மற்றும் அதன் தோல்வி குறித்து ஒரு வார்த்தையேனும் அவர் குறிப்பிடவில்லை என்று மேற்கத்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

சீனாவில் கொவிட் தொற்று கடந்த ஆண்டு பரவிய நிலையில் மக்கள் நடமாட்டத்துக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதோடு கொவிட் பூஜ்ஜியம் என்ற கொள்கை பின்பற்றப்பட்டது. இதனால் பசி, பட்டினி, தொழில் இன்மை ஆகிய கஷ்டங்களுக்கு ஏராளமானோர் ஆட்பட்டனர். நாடெங்கும் மக்கள் இக் கொள்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதையடுத்து அக் கொள்கை வாபஸ் பெறப்பட்டு நாடு திறந்து விடப்பட்டது.

கடந்த வருடம் பற்றி பேசும்போது சீன ஜனாதிபதி கொவிட் மற்றும் அதன் விளைவுகள் தொடர்பாகக் குறிப்பிடாதது ஆச்சரியமளிப்பதாகவும் கடந்த ஆண்டின் முக்கிய நிகழ்வே இதுதான் என்று அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சீன ஜனாதிபதி தன் உரையில் 1930 மற்றும் 40 களில் சீன கம்யூனிஸ்ட் கட்சி சந்தித்த சிரமங்களையும் அவற்றை எதிர்த்து நின்ற கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த உறுப்பினர்களையும் சிலாகித்து பேசியதையும் அக்கட்சி மிகச் சிரமமான ஆனால் ஒரு நூற்றாண்டு காலமாக பெரும் பயணத்தை மேற்கொண்டிருந்ததையும் குறிப்பிட்ட அவர், சர்ச்சைக்குரிய வைரஸ் கொள்கை குறித்து குறிப்பிடவே இல்லை என அவர் உரையை அவதானிகள் விமர்சித்துள்ளனர்.

தென்சீனக் கடலுக்கு இரு கரையிலும் வசிப்போர் ஒரே குடும்பத்தை சேர்ந்தோரே என தைவானைக் குறிப்பிட்ட சீன அதிபர், கடுமையாக உழைக்குமாறு இளைஞர்களுக்கு தன துரையில் அழைப்பு விடுத்திருந்தார்.

## ஜம்மு-காஷ்மீரில் வெற்றிகரமாக செயல்படும் பஞ்சாயத்துகள்

### காணி பயன்பாடு அதிகரித்துள்ளதாக தெரிவிப்பு

பயங்கரவாதத்தால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்த ஜம்மு காஷ்மீர் பிரதேசத்தில் மீண்டும் பஞ்சாயத்து சபைகளை நிறுவுவதன் மூலம் சமூக மற்றும் சுற்றுச் சூழல் அபிவிருத்தி ஏற்பட்டு வருவதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிராம பஞ்சாயத்து சபைகள் மற்றும் நகர்ப்புற உள்ளூராட்சி சபைகள் ஏனைய அரச திணைக்களங்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் இதுவரை கவனிக்கப்படாமல் விடப்பட்டிருந்த சமூக மட்டத்து வளர்ச்சிப் பணிகள் மீளவும் இயங்கத் தொடங்கியிருப்பதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கிராம பஞ்சாயத்து தோட்டக் கமிட்டிகள் நிறுவப்பட்டதன் மூலம் ஜம்மு – காஷ்மீரின் கைவிடப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத காணிகளில் காடு வளர்ப்பு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக கானக வளம் அதிகரித்து இப்பகுதிகள் வனப்புடன் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

2021 – 22 காலப்பகுதியில் 32 ஆயிரம் குவிண்டால் கால்நடைத் தீவனம், 16,500 குவிண்டால் விறகு என்பன 20 ஆயிரத்து 850 கிராம வீடுகளுக்கும் 1646 கிராம பஞ்சாயத்துகளுக்கும் அரசு பகிர்ந்தளித்ததாகவும் காடுகளில் கிடைத்த வருமானம் பஞ்சாயத்துகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதன் விளைவாக அவை தரிசு நிலங்களைத் திருத்தி காடு வளர்ப்புக்கும் பயிர் செய்கைக்கும் பயன்படுத்துவதாகவும் அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இருந்து அறிய முடிகிறது.

கிராம பஞ்சாயத்துகள் மூலம் சாதாரண மக்கள் பயன்பெறுவதோடு காணி பயன்பாடும் அதிகரித்திருப்பதையடுத்து ஏனைய பஞ்சாயத்துகளும் இந் நடைமுறைக்கு விருப்பம் தெரிவித்திருப்பதால் அடுத்த நிதியாண்டில் காணி பயன்பாடு மென்மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சீதனத்துக்கு தடை விதித்துள்ள காஷ்மீர் கிராமம்

### 2004 முதல் தடை மீறினால் தண்டனை

காஷ்மீரில் சமூக ரீதியாக நிலவும் சீதனப் பிரச்சினையால் பெண்களுக்கு திருமணம் தள்ளிப்போவது ஒரு சமூக குறைபாடாகக் காணப்படுவதை எதிர்த்து ஒரு கிராமம் சீதனத்துக்கு தடை விதித்துள்ளது.

பாபாவாயில் என்ற இக்கிராமம் ஸ்ரீநகரில் இருந்து 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. 16 ஆயிரம் பேர் வசிக்கும் இக்கிராம மக்களில் பலர் வாதுமை பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். சீதனம் கொடுக்க வழி இல்லாததால் முதிர் கன்னிகளின் எண்ணிக்கை அதிகரித்ததையடுத்தே இக்கிராம பெரியவர்கள் சீதனத்துக்கு தடை விதித்ததாக இந்தோ ஆசிய செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

சீதனம் வழங்கப்படக் கூடாது என்ற முடிவை 2004ம் ஆண்டு இக்கிராமம் எடுத்ததோடு தமது முடிவை அரச அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியது. இதனால் மணப்பெண்ணிடம் மணமகன் தரப்பினர் தொலைக்காட்சி, பிரிட்ஜ், நகைகள், வாகனம் போன்றவற்றையும் பணத்தையும் கேட்க முடியாது. பதிலாக மணமகன் தரப்பே மணமகளுக்கு 50 ஆயிரத்தைத் தர வேண்டும். மணப்பெண் தட்சணையாக 20 ஆயிரம் போக மிகுதியை மணமகள் தன் செலவுக்காக வைத்துக் கொள்ளலாம்.

இந்நடைமுறையை மீறுபவர்கள் ஊரில் இருந்து விலக்கி வைக்கப்படுவதோடு கிராம பள்ளிவாசலில் வழிபடும் உரிமையும் பறிக்கப்படும். மணமகன் குடும்பத்தவர் இறந்தால் ஊர் மயானத்தில் புதைப்பதற்கும் தடை விதிக்கப்படும் என ஊர் மௌலவி தெரிவித்துள்ளார்.

தற்போது வயதுக்கு வந்த பெண்களுக்கு உரிய காலத்தில் திருமணம் நடப்பதாகவும், கணவன் மனைவி தகராறு ஏற்படுவதில்லை என்றும் சீதனத்துக்காக கடன் வாங்கும் நிலை காணப்படுவதில்லை என்றும் ஊரைச் சேர்ந்த ரஹீம் ரிஸ்வான் தெரிவித்துள்ளார்.

## எம்ஜீஆரின் 106ஆவது பிறந்த தின விழா

தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்ஜீஆரின் 106ஆவது பிறந்த தின விழா எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டை, ஐந்து லாம்பு சந்தியில் உள்ள பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தேசகீர்த்தி சட்டத்தரணி ரஷீட் எம். இம்தியாஸ் முன்னிலையில் நடைபெறும் இந்நிகழ்வில், கலாபூசணம் எஸ். எச். எம். இதிரீஸ், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் குமரகுருபரன், கொழும்பு மாநகர சபை முன்னாள் மேயர் மொஹமட் இக்பால், முன்னாள் நகர சபை உறுப்பினர் ரிபாய் பதுர்தீன், கவிஞர் பிரேம்ஜி, டொக்டர் நிலாம், கலைஞர்களான எஸ். என். நடராஜா, சென்னையிலுள்ள அனைத்துலக எம்.ஜீ.ஆர் மன்றத்தின் தமிழக தொடர்பாளர் ஏ. ஆர். ஹுசைன், அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் தலைவர் எம். அன்பழகன் ஆகியோர் அதிதியாக கலந்து கொள்வார்கள். கலைஞர் கே. ஈஸ்வரலிங்கம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார்கள்.



இந்தியாவிலுள்ள இலங்கைத் துணை உயர் ஸ்தானிகர் டாக்டர் டி. வெங்கடேஷ்வரன், இயக்குநர் (தென்னிந்தியா மற்றும் இலங்கை) ஷாரிம் பின் டான், துணை இயக்குநர் (தென்னிந்தியா மற்றும் இலங்கை) ரசைதி அப்த் ரஹீம் மற்றும் மலேசியாவின் துணைத் தூதரகத்தின் சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின் சந்தைப்படுத்தல் மேலாளர் திருமதி எம்.சி. கவிதா ஆகியோரை அண்மையில் சந்தித்தார். இவர்கள் “கோல்டன் பாரடைஸ் வீசா” நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இலங்கைக்கான மலேசிய சுற்றுலாப் பயணிகளுக்காக இலங்கையின் நிலையான சுற்றுலா வளர்ச்சியை ஆதரிக்கும் திட்டங்கள் உட்பட விசேட பொதிகளை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கலந்துரையாடினார்கள்.



கத்தாருக்கு விஜயம் மேற்கொண்டிருந்த கவிஞர் நஜ்முல் ஹுசைன், முன்னாள் தகவல் திணைக்கள தகவல் அதிகாரி நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் ஆகியோர் தாம் எழுதிய நூல்களை கத்தார் தேசிய நூலகத்துக்கு கையளித்தனர். கத்தார் தேசிய நூலகத்தின் நூல்களை கையேற்கும் சிரேஷ்ட நூலகர் துஃபைல் இக்பால் நூல்களைப் பெற்றுக் கொண்டார். இச் சந்தர்ப்பத்தில் நாவலாசிரியை ஜரீனா முஸ்தபா, கவிஞர் வெளிமடை ரபீக் ஆகியோரின் நூல்களும் கையளிக்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை கத்தாருக்கான இலங்கைத் தூதரக சிரேஷ்ட அதிகாரி ரஷீத் எம். பியாஸ் செய்திருந்தார். ரிஸ்வி வஹாப்பும் இதில் கலந்து கொண்டார்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் தைப்பொங்கல் விழா நாளை

கொழும்புத் தமிழ்ச் சங்க தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு “தைப் பொங்கல் விழா” கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ மங்கையர் வித்தியாலய மாணவிகளின் வரவேற்பு நடனத்தை தொடர்ந்து, “உணர்வுகளின் அறுவடை உழவர் திருநாள்” எனும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்க ஆயுள் உறுப்பினர் ஆ.சடாகோபன் சிறப்புரையை ஆற்றுவார். “பொங்கிக் களி(ழி)ப்போமா?” என்னும் தலைப்பில் காரைக் கவி கந்தையா பத்மானந்தன் தலைமையில் கவியரங்கு நடைபெறும்.

கவிஞர்களான நியாஸ் ஏ சமத், திருமதி பூர்ணிமா கருணாகரன், திருமதி சுபாஷினி பிரணவன், செல்வ திருச்செல்வன் ஆகியோர் பங்குபற்றுவர். ஆடல் நிகழ்வினை சைவ மங்கையர் வித்தியாலய மாணவிகள் நிகழ்துவார். மிடற்றிசையினை சு.பிரஜீவன்ராம் வழங்குவார். குயிலுவக் கலைஞர்கள் வயலின் ச.திபாகரன், மிருதங்கம் வை.வேனிலான், கஞ்சிரா, முகவர்சிங் இ.நிஷாத். கொழும்பு தமிழ்ச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர் க.செந்தில் குமார் நன்றியுரை வழங்குவார்.



## 19 வயதுக்கு உட்பட்ட

# முதல் டி20 மகளிர் உலகக் கிண்ணம் தென்னாபிரிக்காவில் இன்று ஆரம்பம்



இன்று (14) ஆரம்பமாகும் 19 வயதுக்கு உட்பட்ட முதலாவது மகளிர் டி20 உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி ஐக்கிய அமெரிக்காவை எதிர்கொள்ளவுள்ளது.

தென்னாபிரிக்காவில் நடைபெறும் இந்தப் போட்டிகளில் மொத்தம் 16 அணிகள் பங்கேற்கின்றன.

நான்கு அணிகள் கொண்ட நான்கு குழுக்களாக பிரிக்கப்பட்டு நடைபெறும் குழு நிலை போட்டிகளில் ஒவ்வொரு குழுவிலும் முதல் மூன்று இடங்களை பெறும் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம் காணும்.

அடுத்த சுற்றிலும் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இடம்பெறும் போட்டிகள் முடிவில் இரு குழுக்களிலும் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெறும்.

இதில் இலங்கை இளையோர் அணி ஏ குழுவில் ஆடுவதோடு அந்தக் குழுவில் அமெரிக்காவுடன் அவுஸ்திரேலியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் இடம்பெற்றுள்ளன.

இதில் விஷ்மி குணரத்ன தலைமையில் களமிறங்கும் இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட மகளிர் அணியில் அவர் மாத்திரம் தான் சர்வதேச அனுபவம் பெற்ற வீராங்கனையாக உள்ளார்.

அதிரடியாகத் துடுப்பெடுத்தாடக்கூடிய அவர் கடந்த ஜூனில் இந்தியாவுக்கு எதிராக பெற்ற 45 ஓட்டங்களும் சர்வதேச போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்களாகும்.

இன்றைய தினத்தில் அவுஸ்திரேலியா மற்றும் பங்களாதேஷுக்கு எதிரான போட்டியும் ஸ்கொட்லாந்து எதிர் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இந்தியா எதிர் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

# பீலேவுக்கு நிரந்தர சிம்மாசனம்



மறைந்த பிரேசில் கால்பந்து ஜாம்பவான் பீலேவுக்கு மெக்சிகோ கால்பந்து அணியான பச்சுகா அதன் ஹிடால்கோ அரங்கத்தில் நிரந்தரச் சிம்மாசனத்தை அமைத்துள்ளது.

கடந்த டிசம்பர் 29ஆம் திகதி 82 வயது பீலே காலமானதை அடுத்து உலகம் முழுவதும் அவருக்காகத் தொடர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இந்த வாரம் சொந்த அரங்கில் லீக் ஆட்டத்தில் விளையாடிய பச்சுகா கால்பந்து அணி ஆட்டம் முடிந்ததும் அரங்கத்தில் பீலேவுக்கான சிம்மாசனத்தைத் திறந்துவைத்தது.

அந்தச் சிம்மாசனம் கால்பந்து பணிப்பாளர்கள் அமரக்கூடிய இடத்திற்குக் கீழே சர்வதேச கால்பந்து சம்மேளமான பிஃபாவின் பிரதிநிதிகளுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஆட்டத்தின்போது பச்சுகா வீரர்கள் பீலேவுக்கு மரியாதை செலுத்தும் விதமாக பிரேசில் ஜெர்சியை அணிந்திருந்தனர். அரங்கத் திரைகளில் பீலேவின் படங்கள் காட்டப்பட்டன. வெள்ளை நிற பலூன்கள் பறக்கவிடப்பட்டன.

இதற்கு முன் 2001ஆம் ஆண்டில் பச்சுகா அணியின் திடல்களில் ஒன்றுக்கு அவரது பெயர் சூட்டப்பட்டதை அடுத்து பீலே அங்கு சென்றிருந்தார். 3 ஆண்டுகளுக்குப் பின்னர் ஹிடால்கோ அரங்கத்தின் மறுதிறப்பு விழாவிலும் பீலே கலந்துகொண்டார்.



அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டு கழகத்தின் தலைவரும், அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளருமான எச்.பீ. அனீஸ் கழக நிர்வாகத்தால் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் இடம்பெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் கௌரவிக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படத்தை காணலாம். *(படம்: ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)*

# உலகில் அதிக ஒருநாள் போட்டிகளில் தோற்று இலங்கை மோசமான சாதனை



இந்தியாவுக்கு எதிராக கொல்கத்தாவில் நடந்த இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் 4 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்து தொடரையும் இழந்த இலங்கை அணி ஒருநாள் சர்வதேச போட்டிகளில் அதிக தோல்வியை சந்தித்த அணியாகவும் மோசமான சாதனை ஒன்றை படைத்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை (12) நடந்த போட்டியில் இலங்கை அணியின் தோல்வியானது ஒருநாள் சர்வதேச போட்டிகளில் அந்த அணி சந்திக்கும் 437 ஆவது தோல்வியாகும்.

இதன்மூலம் இலங்கை அணி ஒருநாள் போட்டிகளில் அதிக தோல்விகளை சந்தித்திருந்த இந்தியாவை பின்தள்ளி முதலிடத்திற்கு முன்னேறியது. இலங்கை இதுவரை 880 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் அதிக தோல்விகளை சந்தித்தபோதும் 398 ஆட்டங்களில் வெற்றியீட்டியுள்ளது. இதன்படி இலங்கை அணியின் வெற்றி வீதம் 47.74 ஆக உள்ளது.

எனினும் இந்தியாவுக்கு எதிராக நாளை (15) நடைபெறவுள்ள மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றால் இந்த மோசமான சாதனையை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ள முடியும்.

உலகில் அதிகபட்சமாக இதுவரை 1022 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடியிருக்கும் இந்திய அணி 534 போட்டிகளில் வெற்றியீட்டி 436 போட்டிகளை தோற்றுள்ளது.

இந்த மோசமான சாதனையில் 419 தோல்விகளுடன் பாகிஸ்தான் மூன்றாவது இடத்திலும் மேற்கிந்திய தீவுகள் அணி 402 தோல்விகளுடன் 4ஆவது இடத்திலும் உள்ளது.

# ஓஸியன் 2010 அணி வெற்றி

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**




ஓட்டமாவடி பதுரியா–மாஞ்சோலை அல் இஹ்ஸான் விளையாட்டுக் கழகம் நடாத்திய பிரதேச பாடசாலை பழைய மாணவர் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஓஸியன் 2010 அணி 26 ஓட்டங்களினால் மீராவோடை ஹிதாயன்ஸ் 2015 அணியை வெற்றி கொண்டது.

29 பழைய மாணவர் அணிகள் பங்குகொண்ட இச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் மாஞ்சோலை அல்–ஹிறா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதன் இறுதிப் போட்டியில் ஓஸியன்ஸ் 2010 அணி நிர்ணயித்த 44 ஓட்ட வெற்றியை துரத்திய ஹிதாயன்ஸ் 2015, 18 ஓட்டங்களையே பெற்றது.

கழகத்தின் தலைவர் அபூபக்கர் றிபாஸ் தலைமையில் நடைபெற்ற இறுதி நிகழ்வுகளில் பிரதம அதிதியாக கோரளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எம். நௌபர் கலந்து கொண்டார்.

# அட்டாளைச்சேனை மத்தி கிரிக்கெட் போட்டி இன்று

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

அட்டாளைச்சேனை மத்திய மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) இம்முறை க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆசிரியர் மற்றும் மாணவர் அணிகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று (14) அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் 2023 க.பொ.த உயர்தர மாணவர்கள் சுனாமி கிங்ஸ், சுனாமி கிளடியட்டர்ஸ், சுனாமி வொறியஸ், சுனாமி ஸ்ரைக்கர்ஸ் ஆகிய நான்கு அணிகளாகவும், ஆசிரியர் அணியும் பங்குபற்றவுள்ளன.

பாடசாலை அதிபர் ஏ.சி. எம்.ஹரீஸ், பிரதி, உதவி அதிபர்கள் மற்றும் சுற்றுப் போட்டி அனுசரணையாளர்கள் ஆகியோர் பரிசளிப்பு நிகழ்வில் அதிதிகளாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

# விக்டோறியஸ் கழகத்தின் நாற்பதாவது ஆண்டு விழா

**கல்முனை விஷேட நிருபர்**



கல்முனை விக்டோறியஸ் விளையாட்டுக் கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவு விழாவின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வியாழக்கிழமை (12) கல்முனை ஐக்கிய சதுக்கத்தில் நடைபெற்றது.

கழகத்தின் ஸ்தாபகரும் தவிசாளருமான கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் பெஸ்டர் ஏ.எம். றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இதன்போது கழகத்தின் உத்தியோகபூர்வ டீசேர்ட் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன் அதிதிகளுக்கும் கழக அங்கத்தவர்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டது. இந்த அங்குரார்ப்பண நிகழ்வின் முக்கிய அம்சமாக கழக அங்கத்தவர்களின் சைக்கிளோட்டமும் இடம்பெற்றது.

# ஆஸி. லீக்கில் விலக ரஷீட் கான் எச்சரிக்கை



ஆப்கானுடனான ஒருநாள் தொடரில் இருந்து அவுஸ்திரேலிய அணி விலகியதை அடுத்து அவுஸ்திரேலிய பிக் பாஷ் லீக் போட்டிகளில் இருந்து விலகுவது குறித்து ஆப்கான் அணித்தலைவர் ரஷீட் கான் எச்சரித்துள்ளார்.

“மார்ச்சில் நடைபெறவிருந்த தொடரில் இருந்து அவுஸ்திரேலியா வெளியேறியது ஏமாற்றம் தருகிறது” என்று குறிப்பிட்ட ரஷீட் கான், “ஆப்கானுடன் ஆடுவது அசௌகரியமாக இருந்தால், பிக் பாஷ் லீக்கில் நான் ஆடுவதால் எவருக்கும் அசௌகரியம் ஏற்படுத்த விரும்பவில்லை. அதனால், அந்தப் போட்டியில் எதிர்காலத்தில் ஆடுவது பற்றி தீவிரமாக ஆலோசிக்கவுள்ளேன்” என்றார்.

ஆப்கானில் தலிபான் அரசு பெண்கள் மீது ஒடுக்குமுறையில் ஈடுபடுவதாகக் கூறியே ஆப்கானுடனான போட்டிகளை அவுஸ்திரேலியா கைவிட்டுள்ளது.

வரும் மார்ச் மாதம் ஐ.சி.சி சுப்பர் லீக்கின் ஓர் அங்கமாகவே ஐக்கிய அரபு இராச்சியத்தில் அவுஸ்திரேலிய அணி ஆப்கானுடன் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடவிருந்தது.

பிக் பாஷ் லீக்கல் அடிலைட் ஸ்டைக்கர் அணிக்காக விளையாடி வரும் ரஷீட் கான் 8 போட்டிகளில் விளையாடி 6 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் கால்பந்து: இலங்கை பெண்கள் அணி தகுதிச்சுற்றில்

2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் பெண்களுக்கான கால்பந்து போட்டிக்கு இலங்கை ஆசிய தகுதிகாண் சுற்றில் டி குழுவில் ஆடவுள்ளது.

இந்த ஆசிய தகுதிகாண் போட்டியின் முதல் சுற்றில் 19 அணிகள் ஆடவுள்ளன. இந்த அணிகளை குழு நிலையாக பிரிக்கும் நிகழ்வு கோலாலம்பூரில் கடந்த வியாழக்கிழமை (12) நடைபெற்றது.

இந்த முதல் சுற்றில் அணிகள் ஐந்து குழுக்களாக பிரிக்கப்படுகின்றன. இதில் நான்கு குழுக்களில் தலா நான்கு அணிகள் இடம்பெறுவதோடு ஒரு குழுவில் மூன்று அணிகள் இடம்பெற்றுள்ளன. வரும் ஏப்ரல் 3 தொடக்கம் 11 வரை லீக் வடிவத்தில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

போட்டிகள் நடத்தப்படும் இடம் பின்னர் அறிவிக்கப்படவுள்ளது. இந்த போட்டியில் இலங்கை அணி டி குழுவில் இடம்பெற்றிருப்பதோடு அந்தக் குழுவில் இலங்கையுடன் தாய்லாந்து மங்கோலியா மற்றும் சிங்கப்பூர் அணிகள் இடம்பெற்றுள்ளன.



ஒவ்வொரு குழுவிலும் வெற்றி பெறும் அணிகள் ஆசிய பிராந்தியத்தில் வலுவான அணிகள் ஆடும் இரண்டாம் சுற்றுப் போட்டிக்குத் தகுதி பெறும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 14ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.




# வர்த்தகர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான சாத்தியக்கூறு குறித்து அரசாங்கம் ஆராய்வு

## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

வர்த்தகங்களைப் பாதுகாப்பதற்கும், வர்த்தகர்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கும் கடன்களை மீளச் செலுத்துவதை ஒத்திவைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயவுள்ளதாக ஜனாதிபதி . ரணில் விக்ரமசிங்க அவர்கள் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஆராயுமாறு மத்திய வங்கி ஆளுநருக்கு அறிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மகளிர் கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் பெண் தொழில் முனைவோரை கௌரவப்படுத்தும் நிகழ்வு கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்றது .இங்கு உரையாற்றிய ஜனாதிபதி,

ஒரு தனி நபர் கடனில் இருந்தால், அதை தீர்க்க முடியும். உறவினரிடமிருந்து நண்பரிடம் உதவி கேட்கலாம். ஆனால் நாடு வங்குரோத்தானால் அதற்கு உதவ உலகில் ஒரே ஒரு அமைப்புதான் இருக்கிறது. அதுதான் சர்வதேச நாணய நிதியம். நாம் எவ்வளவோ சப்தமிட்டாலும் பிரார்த்தனை செய்தாலும் வேறு யாரிடமிருந்தும் உதவி கிடைக்காது. இறுதியாக, இந்த அமைப்பிலிருந்துதான் எங்களுக்கு உதவியும் நிவாரணமும் கிடைக்கிறது.



நாங்கள் அங்கு சென்று இது குறித்து பேச்சு நடத்தினோம். தாம் நிதியுதவி வழங்கும் ஒரு நாட்டில் லாபமீட்டாத எந்த ஒரு நிறுவனமும் இருக்க முடியாது என்று சர்வதேச நாணய நிதியம்கூறுகிறது. திறந்த பொருளாதாரம் இருந்தால், நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை மற்ற துறைகளுக்கு வழங்க வேண்டும். அரசு நிர்வகிக்கும் நிறுவனங்கள் லாபகரமாக இருக்க வேண்டும். அப்படி நடந்தால் அரசின் பணம் மக்களுக்கு பயன்படலாம். இல்லையெனில், நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை நடத்துவதற்கு அந்த பணத்தை அரசு செலவிடுகிறது.

நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் இல்லாவிட்டால், மக்களுக்கு நிவாரணம் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு அரசாங்கப் பணத்தை செலவிட முடியும்.இந்த நேரத்தில் நாமும் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல வேண்டியிருந்தது. நான் பதவியை பொறுப்பேற்கும் போது சில பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கடந்த ஆண்டு செப்டம்பரில் சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள் மட்ட ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதைத்தான் இப்போது செயல்படுத்தி வருகிறோம். கடந்த ஆண்டு அனைத்து கடினமான தீர்மானங்களையும் எடுத்தோம் என்றார். (பா)

## மக்கள் வங்கியின்; Vaasi Kotiyai 25 வெற்றியாளர்களுக்கு தங்க நாணயங்கள் அன்பளிப்பு



2022 மார்ச் 01 முதல் நவம்பர் 07 வரையிலான காலப்பகுதிக்கான மக்கள் வங்கியின் ; "People's Remittance Vaasi Kotiyai, Ewannai Dinannai" குலுக்கலில் வெற்றி பெற்ற 25 பேருக்கு, கொழும்பு 10 இல் உள்ள மக்கள் வங்கி, வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவை வளாகத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் தங்க நாணயங்கள் வழங்கப்பட்டன.

பரிவர்த்தனை வங்கிச்சேவை மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளரான றொஹான் பத்திரகே, வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள் பிரிவின் உதவிப் பொது முகாமையாளரான அருணி லியனகுணவர்தன மற்றும் மக்கள் வங்கியின் வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளரான திலினி பெரேரா ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## ஹேமாஸ் அவுட்ரீச் பவுன்டேஷன் 21ஆவது பியவர ஆசிரியர் பயிற்சித் திட்டம் முன்னெடுப்பு



ஹேமாஸ் அவுட்ரீச் பவுன்டேஷன் மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சின் இளம் சிறுவர் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தியின் தேசிய செயலகத்துடன் இணைந்து 21 ஆவது ஆண்டாகவும் வருடாந்த ஆசிரியர் பயிற்சித் திட்டத்தை முன்னெடுத்திருந்தன. மூன்று நாட்கள் வதிவிட பயிற்சித் திட்டமாக அமைந்திருந்ததுடன் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் இந்தப் பயிற்சிஇ புகழ்பெற்ற பயிற்றுவிப்பாளர்களால் முன்னெடுக்கப்பட்டன. இதில் நாடு முழுவதிலும் காணப்படும் பியவர முன்பள்ளிகளைச் சேர்ந்த 100 க்கும் அதிகமான ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

2002 ஆம் ஆண்டில் பியவர முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. ஹேமாஸ் குழுமம் தனது ஆரம்பப் பங்காண்மையை சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் சிறுவர் செயலகத்துடன் மேற்கொண்டிருந்தது. அதனூடாக குறைந்த வசதிகள் படைந்த சிறுவர்களுக்கு முன்பராய மற்றும் சிறுவர் பராமரிப்பு விருத்திக் கட்டமைப்பின் கீழான அம்சங்களில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. வாழ்க்கையை ஆரம்பிக்கும் தறுவாயிலுள்ள சிறுவர்களின் ஆரம்பப் படிமுறைகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதாக பியவர அமைந்துள்ளது. சிறுவர்களுக்கு உறுதியான ஊக்குவிப்பை வழங்குவதுடன் அவர்களின் வாழ்க்கைகளுக்கு சிறந்த அடித்தளத்தை வழங்குவதும் அதன் நோக்காகும்.

கல்வியின் அடிப்படை ஆரம்பப்பகுதியாக அமைந்துள்ள முன்பள்ளிகள் இந்தத் திட்டத்தினூடாக நிர்மாணிக்கப்பட்டு உள்ளூராட்சி சபைகளுக்கு கையளிக்கப்படுவதுடன் அவற்றில் பணியாற்றுவதற்கு தகைமை வாய்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு அவர்களின் சம்பளக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இந்த சபைகள் மேற்கொள்கின்றன.

இந்த பள்ளிகளின் பொதுப் பராமரிப்புப் பணிகளை உள்ளூராட்சி சபைகள் மேற்கொள்வதுடன் ஹேமாஸ் அவுட்ரீச் மையத்தினால் அடிக்கடி ஆசிரியர் பயிற்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு தரமான கல்வி இளம் சிறுவர்களை சென்றடைவதை உறுதி செய்கின்றது.



புத்தளம் எச்.எம்.குறுாப் நிறுவனத்தின் இன்னொரு அங்கமான எச்.எம். Spices வர்த்தக நிலையம் அண்மையில் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையம் புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களின் பங்களிப்பில் திறந்து வைக்கப்பட்டது. புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் மற்றும் புத்தளம் போலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குலதுங்க போன்றோரும் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டனர். பல்வேறு வகையான இலங்கைக்கே உரித்தான முதல்தர Spices வகைகள், nuts வகைகள், essential oil, தேயிலை வகைகள் போன்றவற்றை இங்கு பெற்றுக் கொள்ளமுடியும். புத்தளம் நகரின் பிரபல கட்டட நிர்மாண நிறுவனமான HM Builders & Supplies (Pvt) Ltd நிறுவனத்தின் தாய் நிறுவனமான எச்.எம்.குறுாப் கூட்டு நிறுவனத்தின் இரண்டாவது அங்கமாக HM Spices திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## LMD இன் வாடிக்கையாளர் சிறப்பு கருத்துக் கணிப்பில் 4ஆவது வருடமாகவும் செலான் வங்கி முதலிடம்

இலங்கையில் வங்கியியல் மற்றும் நிதிச் சேவைகளில் சேவைத் தரத்தில் சிறந்த ஸ்தானத்தைக் கொண்டிருக்கும் அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி தனது நிலையை மேலும் உறுதி செய்யும் வகையில் LMD இன் வாடிக்கையாளர் சிறப்பு கருத்துக் கணிப்பில் தொடர்ச்சியாக நான்காவது வருடமாகவும் முதல் நிலையில் தரப்படுத்தப்பட்டிருந்தது.

வங்கியின் 34 வருட கால செயற்பாடுகளில் வாடிக்கையாளர் சேவையில் காண்பிக்கப்பட்டு வரும் கரிசனைக்கு எடுத்துக் காட்டாக இந்த சாதனை அமைந்துள்ளது. கடந்த காலங்களில் அன்புடன் அரவணைக்கும் வங்கி எனும் தனது தொனிப்பொருளுக்கமைவாக வாடிக்கையாளர்களின் தேவைகளை புரிந்து கொண்டு அவர்களுக்கு பொருத்தமான நிதித் தீர்வுகளை வழங்கிய வண்ணமுள்ளது.



இந்த மைல்கல் சாதனை தொடர்பில் செலான் வங்கியின் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி ரமேஷ் ஜயசேகர கருத்துத் தெரிவிக்கையில் "வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சகல தீர்வுகளும் ஒப்பீட்டளவில் ஒரே மாதிரியானவையாக காணப்படும் நிலையில் வங்கித் தீர்வுகளைப் பொறுத்தமட்டில் சேவை என்பது பிரதான மாறுபடுத்தும் காரணியாக அமைந்துள்ளது. செலான் வங்கியில் வாடிக்கையாளருக்கு முன்னுரிமை எனும் கொள்கையின் பிரகாரம் ஒவ்வொரு ஊழியரும் செயலாற்றுகின்றனர். வாடிக்கையாளர் சேவைக்காக நாம் காண்பிக்கும் முயற்சிகளுக்குஇ தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாகவும் ஒவ்வொரு ஆண்டிலும் கௌரவிப்பைப் பெற்றுக் கொள்வதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்." என்றார்.

## TATA வணிக வாகன உரிமையாளர்களுக்காக மெகா பிரசாரத்தை ஆரம்பித்துள்ள DIMO - TATA

இலங்கையின் முன்னணியிலுள்ள பல்வகை துறைசார்ந்த கூட்டு நிறுவனமான TATA நிறுவனம்TATA Motors உடன் இணைந்து, 'DIMO TATA Mega Campaign' 2023 ஜனவரி 09 முதல் 21 வரை 16 16 DIMO TATA சேவை மையங்கள் மற்றும் நாடு முழுவதும் நிறுவப்பட்ட 32 இடங்களிலும் முன்னெடுக்கிறது.

இந்த பிரசார திட்டமானது அனைத்து TATA வர்த்தக வாகன வாடிக்கையாளர்களுக்கும் தங்களது வாகனம் குறைந்தபட்ச செயலிழப்புகள் மற்றும் பராமரிப்பு செலவுக் குட்பட்டதாக இயங்குவதை உறுதி செய்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது. இதன் விளைவாக வாடிக்கையாளர்களின் தினசரி செயற்பாடுகள் சீராக இடம்பெறுவதோடு குறிப்பாக வாகன இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ள தற்போதைய சூழலில் மிகவும் அவசியமானதாக காணப்படும் வாகனங்களின் நீண்ட ஆயுட்காலத்தை பேணுவதற்கும் வழி வகை செய்கின்றது.



இதன் மூலம் எஞ்சின், கியர் பொக்ஸ், டிபெரென்ஷியல்ப்ரொப்பலர், ஷாஃப்ட் ,கிளட்ச் சஸ்பென்ஷன் ஸ்டீயரிங், பிரேக், ஹைட்ரோலிக்ஸ், எலக்ட்ரிக்கல்ஸ், எரிபொருள் தொகுதி உள்ளிட்ட 80 விடயங்கள் தொடர்பான முழுமையான ஆய்வு போன்ற பல்வேறு நன்மைகளை வாடிக்கையாளர்கள் பெறுவார்கள். வாகனத்தை சிறந்த முறையில் பராமரிக்க என்னென்ன பழுதுபார்த்தல் விடயங்கள் மற்றும் சேவைகள் தேவை என்பது பற்றிய ஆலோசனையுடன் ஒவ்வொரு ஆய்வு பற்றிய விரிவான அறிக்கைகளையும் இதில் பெற முடியும். இது தவிர இந்த பிரசார திட்டத்தின் மூலம் இணையும் வாடிக்கையாளர்கள்இ உதிரிப் பாகங்களுக்கு 50% வரை தள்ளுபடி வவுச்சர்களைப் பெறலாம். இவை 2023இ மார்ச் 31 வரை செல்லுபடியாகும் என்பதுடன் குறித்த காலப்பகுதியில் இதனை பல முறை பயன்படுத்தலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நுகர்வோருக்கு புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் Pelwatte Dairy



பல்வேறு வகையான பால் உற்பத்திகளை உற்பத்தி செய்யும் இலங்கையின் முன்னணி உள்ளூர் வர்த்தக நாமங்களில் ஒன்றான Pelwatte Dairy ஆனது 200 கிராம் Pelwatte Chilli Butter, 8 மற்றும் 30 துண்டுகள் கொண்டPelwatte Ceylon Butter, 500 கிராம் தரகத்திலடைத்த பெல்வத்தை நெய் போன்ற புதிய தயாரிப்புகளை பரீட்சார்த்தமாக நுகர்வோருக்கு அண்மையில் அறிமுகம் செய்துள்ளது.. Pelwatte Dairy Industries Limited நிறுவனம், Modern Trade (சுப்பர் மார்க்கெட்) General Trade (விநியோகஸ்தர்கள் முகவர்கள்) மற்றும் HORECA (சமையல்கலை நிபுணர்கள்) ஆகியவற்றின் பணியாளர்களின் பங்குபற்றுதலுடன் பெல்வத்தை நிறுவனத் தலைவர் ஆரியசீல விக்ரமநாயக்க முன்னிலையில் இந்த பரீட்சார்த்த சோதனை நிகழ்வு BMICH இல் நடைபெற்றது.

இந்நிகழ்வு குறித்து கருத்து தெரிவித்த Pelwatte Dairy தலைவர் ஆரிய சீல விக்ரமநாயக்க "இந்த புதிய பால் பொருட்களை சந்தைக்கு அறிமுகப் படுத்துவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

## Marriott Colombo இன் Courtyard திறந்துவைப்பு



Marriott Bonvoy இன் 30 வணிக சின்னங்களின் அசாதாரண அறிமுகத்தின் ஒரு பகுதியான Marriott Colombo தனது Courtyard திறப்பதாக அறிவித்தது, இது இலங்கையில் திறக்கப்படும் முதல் Courtyard என்பது குறிப்பிடத்தக்கது. இந்த கண்கவர் நகரத்தை ஆராயும் விருந்தினர்களுக்கு அதிநவீன மற்றும் வசதியான சூழலை வழங்கும் விதத்தில் Marriott Colombo Courtyard ஆனது கொழும்பு நகரின் மத்திய வர்த்தக மாவட்டத்தின் மையப்பகுதியிலுள்ள கொழும்பு சிட்டி சென்டருக்கு அருகில் அமைந்துள்ளது.

"தெற்காசியாவில் முடிவற்ற கடற்கரைகள் மற்றும் காலத்தால் அழியாத இடங்களை கொண்ட தீவான இலங்கையில் Marriott இன் Courtyardஐ அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" என்று Marriott International இன் தெற்காசியாவின் பகுதி துணைத் தலைவர் சுயதெரயுடநஒ தெரிவித்தார். மேலும் ""Mariott Colombo மூலம் Courtyard திறக்கப்பட்டது, இலங்கையில் Marriott Bonvoy இன் மூன்றாவது சொத்தை குறிக்கிறது, இது பிராந்தியத்தின் வளர்ச்சிக்கான எங்கள் அர்ப்பணிப்பை மேலும் பூர்த்தி செய்கிறது மற்றும் இந்த அழகான இடத்திற்கு வருகை தரும் பல்வேறு வகையான பயணிகளுக்கு இடமளிக்கிறது." என்று கூறினார்.

கொழும்பின் மேற்குக் கடற்கரையில் அற்புதமான இந்தியப் பெருங்கடலைக் காணும் வகையில் அமைந்துள்ள இந்த ஹோட்டல் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து 45 நிமிட தூரத்திலுள்ளது. Marriott Colombo இன் Courtyard வசதியான வணிக இணைப்புகள், செயல்திறன் கொண்ட தற்கால அறைகள் மற்றும் வசதியாக வடிவமைக்கப்பட்ட வேலைப் பகுதிகளுடன் நகர வனப்பு காட்சிகளை வெளிப்படுத்துகிறது. புத்தாக்க சிந்தனையுடன் வடிவமைக்கப்பட்ட 164 அறைகளில் செயல்பாட்டு வேலைப் பகுதிகள் மற்றும் அதிவேக இணைய அணுகலை வழங்கப்படுகின்றது, இணைக்கப்பட்ட மற்றும் உற்பத்தி செய்யும் வகையில் பார்வையாளர்களுக்கு சேவைகளை வழங்குகின்றது. விருந்தினர்கள் நீண்ட நேரம் தங்குவதற்கு அல்லது குடும்பப் பயணத்திற்கு ஏற்ற வசதியான முறையில் இந்த அறைகளில் தங்க முடியும்.